Registered as a NewsPaper

விலை ரூபா-7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | ஐப்பசி-1 | 17-10-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -242

S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில்
அசல் 22 கரட்
தங்க நகைகளை
உங்கள்
விருப்பத்திற்கேற்ப
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
(சி-10477) T.P: 024-222 4247

# இணைந்து வாழவே நாம் விரும்புகிறோம்

# பிரிந்துவாழ பேரினவாதம் நிர்ப்பந்திக்கிறது

## திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன்



**இணைந்து வாழவேண்டும் என்பதில் நாம் தெளிவாக, உறுதியுடன் இருக்கின்றோம். நீங்கள் பிரிந்து சென்று வாழ்வதைத் தவிர வேறுவழி கிடையாது என்று சிங்களப் பேரினவாதம் கூறுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பாராளுமன்றக் கூட்டமைப்பு எம்.பிக்கள் மகாநாயக்கரைச் சந்தித்துவிட்டு வெளியேறும் போது இடம்பெற்ற ஆர்ப்பாட்டம் இதனையே எடுத்துக் காட்டுகின்றது என்று விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் தெரிவித்துள்ளார்.**

நேற்றுக்காலை கூட்டமைப்பு எம்.பிக்கள்-முஸ்லிம் சமூகப் பெரியார்கள் சந்திப்பின்போது பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

இச்சந்திப்புக்கு பாராளுமன்றக் குழுவின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமைவகித்தார் "முஸ்லிம் பெரியார்களுடைய சந்திப்பு ரம்ழான் பெருநாள் ஆரம்பமான மறுநாள் இடம்பெறுகிறமை எனக்கு மனநிறைவைத் தருகின்றது. ரம்ழான் நோன்புப்பெருநாளுக்குப் பள்ளிவாசலுக்கு வரும்படி என்னை முஸ்லிம் அன்பர்கள் அழைத்துள்ளார்கள். நான் அதனை ஏற்றுக் கொண்டுள்ளேன். நிச்சயம் அதன்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பா.உ கள் திருமலையில் விழிப்புணர்வுப் பிரச்சாரம்

மூன்றுநாள் அரசியல் விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், எஸ்.கனகரத்தினம், சிவநாதன் கிசோர், சிவசக்தியானந்தன், வினோநோகாரதலிங்கம், எஸ்.கஜேந்திரன், சிவநேசன், மா.வை சேனாதிராசா, சிவாஜிலிங்கம், ஈழவேந்தன், செல்வி.க.தங்கேஸ்வரி, அ.கனகசபை, க.பத்மநாதன், எஸ்.ஜெயானந்தமூர்த்தி, ப.அரியநேத்திரன் ஆகியோர் திருகோணமலை வந்திருந்தனர். திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா.சம்பந்தன். க.துரைரட்ணசிங்கம்

(12ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து நாடு திரும்பிய 600 குடும்பங்களுக்குக் கொடுப்பனவில்லை

ஆரம்பகாலத்தில் இந்தியாவிலிருந்து தலைமன்னார் ஊடாக நாடு திரும்பி மீளக்குடியமர்ந்த 600இற்கும் அதிகமான குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு 25 ஆயிரம் ரூபா இதுவரை வழங்கப்படவில்லை.

முன்னர் இதற்குரிய நிதியுதவியினை நிகொட் நிறுவனம் வழங்கியது. தற்போது நிகொட் நிறுவனம் வழங்காத காரணத்தினால் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு வழங்க வேண்டிய நிலையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை இக்கொடுப்பனவு கிடைக்காத மக்கள் பெரும் கஷ்ரங்களை எதிர்நோக்கியுள்ளனர். (மி)

## சிங்கள ஊர்காவற் படையினர் இருவரும் தமிழீழ நீதிமன்றால் பிணையில் விடுப்பு

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியினுள் ஆயுதங்களுடன் பிரவேசித்தபோது கைது செய்யப்பட்டு தமிழீழ நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு ஊர்காவற் படையினரும் நேற்று மாலை சம்பூர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு காசுப்பிணை, ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் ஊடாக அவர்களது உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் இருவரையும் தலா ஒரு இலட்சம் ரூபா காசுப்பிணையிலும், ஆட்பிணையிலும் தமிழீழ நீதிமன்றம் விடுவித்து. மேல் விசாரணையை நவம்பர் 26ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனே ஊர்காவற்படையினருக்காக காசுப்பிணை செலுத்தியதுடன், ஆட்பிணையாகவும் தானே கையொப்பமிட்டார். இவர்கள் இருவரும் நேற்றிரவு பொலிசாரால் அழைத்துவரப்பட்டு முதலில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்திற்கு கொண்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை சிறில. தூதரகம் முன் மறியல் நடத்த தமிழக மீனவர் திட்டம்

தமிழக மீனவர்களின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு சுமுகமுடிவேற்பட மத்திய மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர் வரும் 21ஆம் திகதி சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்தின் முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடப்போவதாக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இராமநாதபுரம், நாகை, தஞ்சை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களில் மீனவர்கள் மேற்கொண்டுவரும் காலவரையறையற்ற வேலைநிறுத்தம் இரண்டாவது வாரமாக நீடிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

சிறிலங்காக் கடற்படையின் தாக்குதல்களைக் கண்டித்து இப்போராட்டம் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை, இந்தியாவுக்கு இடையே நேரடித் தொலைபேசிச் சேவை

### - நேற்று ஆரம்பமாகியது

இலங்கைக்கும்,இந்தியாவிற்கு மிடையிலான நேரடித் தொலைத் தொடர்பு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மத்தியமைச்சர் தயாநிதி மாறன் சென்னையில் இதனை ஆரம்பித்து வைத்துள்ளார்,இதுவரை சென்னையிலிருந்து கொழும்பிற்கு தொடர்பு கொள்ள சிங்கப்பூர் போன்ற நாடுகளின் இணைப்புகளைப் பயன்படுத்த வேண்டியிருந்தது. ஆனால் நேற்று இராமேஸ்வரம்,தலைமன்னாரிற்கிடையே வலைப்பின்னல் ஒன்றினை தொடங்கியுள்ளமையால் மற்றைய நாடுகளின் இணைப்பு உதவியின்றி நேரடியாகவே இலங்கையுடன் தொடர்பு கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.இதுவரையிருந்த சென்னை கொழும்பு தொலைபேசிக் கட்டணம் நிமிடத்திற்கு 18 ரூபாவாக

(12ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்திற்கான ஆலோசனைச்சபை பேச்சுக்கு உதவியாக மட்டும் இருக்கும்

### - அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர

சமாதானத்திற்கான தேசிய ஆலோசனைச் சபை சமாதானப் பேச்சுக்களுக்கு இணையானதல்ல என சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையிலான சமாதானப் பேச்சுக்களுக்கு இணையானதாக இச் சபை இருக்காது என சிறிலங்காவின் அமைச்சரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர வலியுறுத்தியுள்ளார்.

சமாதானப் பேச்சுக்களுக்கு உதவியாக மட்டுமே இச்சபை இருக்கும் என்றும் எதிர்க்கட்சியிடமிருந்து இச்சபைக்கான அதிக ஆதரவை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என்றும் சபையின் அடுத்த கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் பங்குபற்றும் என அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் சமரவீர தெரிவித்துள்ளார்.

## யாழ் .நகரப் பகுதியில் நேற்று வெள்ளைப் பிரம்பு விழிப்புலனற்றோர் பேரணி

யாழ். விழிப்புலனற்றோர் சங்கத்தினர் சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தை முன்னிட்டு மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகாமாக ஏற்பாடு செய்யப்பட்ட பேரணி ஒன்று நேற்றுக் காலை 10.30 மணியளவில் வேம்படி மகளிர் கல்லூரியில் ஆரம்பித்து யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் முடிவடைந்தது. பேரணியின் முடிவில் பொதுக் கூட்டம் ஒன்றும் இடம் பெற்றது. இந் நிகழ்விற்குபிரதம விருந்தினராக, சர்வதேச லயன் கழகத்தின் 3063இன் மாவட்ட செயலாளர் எஸ்.ஞானராஜா அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். இந் நிகழ்வில் யாழ் மாவட்ட லயன் கழகத்தினர்,யீயோ கழகத்தினர், யாழ். மாவட்ட விழிப்புலனற்றோர் கழகத்தினர் என. பலரும் கலந்து கொண்டனர்

(33, 36)

### மின்சாரம் தடைப்படல்

வான்வெளி மின் கடத்தி பொருத்தப்பட வேண்டியுள்ளதால் ஏ-9 வீதியில் கிளிநொச்சி மைதானத்திலிருந்து கந்தசாமி கோவில் வரைக்கும் 2004.10.19 ஆம் திகதி

* காலை 08.00 மணி தொடக்கம்

* பி.பகல் 02.00 மணி வரை

மின்சாரம் தடைப்படும் என மின்சாரசபையினர் வாடிக்கையாளர்களுக்கு அறிவிக்கின்றனர்.

## ஊடகங்கள் நிலைய இணைப்பாளர் நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவாவார்

### -யாழ்.பல்கலைத் துணைவேந்தர் தெரிவிப்பு

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்திற்கான புதிய பயிற்சி இணைப்பாளர் நியமனம் தொடர்பாக யாழ். குடாநாட்டைச் சேர்ந்த பத்திரிகைகளின் ஆசிரியர்களும், பல்கலைக்கழக ஆசிரியர்களும் அங்கம் வகிக்கும் ஆலோசனைக்குழு பிரேரித்த படி பகிரங்க நேர்முகப்பரீட்சை மூலமே குறித்த பதவிக்குப் பொருத்தமானவர் நியமிக்கப்படுவார் என யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் எஸ்.மோகனதாஸ் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட பதவிக்கு பத்திரிகை விளம்பரங்கள் வழியாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சை மூலம் பொருத்தமானவர் தெரிவு செய்யப்படுவதை விடுத்து, சில மறைமுகமான நகர்வுகள் மூலமாக இப் பதவிக்கு நியமனம்

(12ஆம் பக்கம் பார்க்க)


# கிளிநொச்சியில் சிறுவர் நலத்திட்ட பிரச்சாரமும் பாதிக்கப்பட்ட சிறார்களுக்கான வேலைத்திட்டமும்

(அலுவலக செய்தியாளர்)

சிறுவர் நலத்திட்டப் பிரச்சாரமும் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான வேலைத்திட்டமும் என்ற தலைப்பிலான நிகழ்வு ஒன்று கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நேற்று மாலை 1.30 மணியளவில் இடம் பெற்றது.

இந் நிகழ்வில் தமிழீழ தேசிய





யக் கொடியினை சிறுவர் இல்லப் பொறுப்பாளர் ரவி ஏற்றி வைக்க, தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை அதன் நிர்வாகப் பொறுப்பாளர் வின்சன் ஏற்றி வைத்தார்.

அடுத்து மண்டத்தில் ஆரம்பமான நிகழ்வுகளில் வரவேற்புரையினை சிறுவர் நலத் திட்ட நிகழ்ச்சி திட்ட அலுவலர் ஜெயக்குமார் நிகழ்த்தினார். தலைமையுரையினை சிறுவர் நலத்திட்ட முகாமையாளர் நாகேந்திரம் நிகழ்த்தினார்.

மேற்படி நிகழ்விற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் ஆசியுரையினை வழங்கினார். கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தி.இராசநாயகம், யுனிசெப் இணைப்பாளர் லாகுறா, தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகப் பொறுப்பாளர் வின்சன், ஆசிரிய ஆலோசகர் கணேசலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தின் வலயமட்டத்திலான, கோட்டமட்டத்திலான ஓவியம் மற்றும் நாடகப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவ, மாணவிகளுக்கும், பாடசாலைகளுக்குமான பரிசில்களையும், சான்றிதழ்களையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களான அரசாங்க அதிபர், யுனிசெப் இணைப்பாளர், வலயக்கல்விப்பணிப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிர்வாகப் பொறுப்பாளர், ஆசிரிய ஆலோசகர், சிறுவர் இல்லப் பொறுப்பாளர் ஆகியோர் வழங்கிக் கௌரவித்தனர்.

அத்தோடு இந்நிகழ்வில் ஓவியப்போட்டியில் வலய மட்டத்தில் வெற்றியீட்டிய மாணவர்களின் ஓவியங்கள் நூற்றுக்கு மேற்பட்டவை கண்காட்சியாக வைக்கப்பட்டு பார்வைக்கு விடப்பட்டன.

பரிசளிப்பினைத் தொடர்ந்து வலயமட்டத்தில் முதலாம் இடத்தினைப் பெற்ற கிளி.பாரதி வித்தியாலய மாணவர்களின் விமலேஸ்வரன் ஆசிரியரின் நெறியாழ்கையில் உருவாக்கப்பட்ட "கீழ்மை என்றும் வேண்டுவோம் போ...போ..." என்ற தலைப்பிலான நாடகம் இடம்பெற்றது.

இறுதியாக விழிப்புணர்வுத் திட்ட அலுவலர் கனேந்திரனின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது. (கு,ச)

# கிளி. அழகியற் கலாமன்றத்தில் சுப்பையா சாமுவேல் மண்டபம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி அழகியல் கலாமன்ற ஆசிரியரும் ஆர்மோனிய வித்துவானுமாகிய அமரர் சாமுவேல் சுப்பையா ஞாபகார்த்தமான நினைவு மண்டபம் கிளிநொச்சி அழகியல் கலாமன்றத்தில் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரச அதிபரினால் திறந்துவைக்கப்பட்டது.

நேற்றுக் காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலய பிரதி அதிபர் பங்கயச்செல்வன் தலைமையில் ஆரம்பமான மேற்படி நிகழ்வில் பொது ஈகச்சுடரினை கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் காண்டீபன், கிளி.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் தலைவர் கணேஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.



தமிழீழ தேசியக் கொடியினை அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றி வைத்தார். அழகியல் கலாமன்றக் கொடியினை அதன் அதிபர் விஜய சேகரன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து அமரர் சாமுவேல் சுப்பையா நினைவு மண்டபப் பெயர்ப்பலகையினை தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் திரைநீக்கம் செய்துவைத்தார்.



கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் பணிமனையின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட மேற்படி புதிய மண்டபத்தினை அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த சுப்பையாவின் திருவுருவப் படத்திற்கு கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் மலர்மாலை அணிவித்தார். மண்டபத்தின் மேடையில் வைக்கப்பட்ட மங்கல விளக்கினை கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் அருள் மாஸ்ரர், மிருதங்கவித்துவான் சிவபாலன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

வரவேற்புரையினை அழகியல் கலாமன்ற செயற்குழு உறுப்பினர் சிவலிங்கம் நிகழ்த்தினார். தலைமையுரையினைத் தொடர்ந்து கிளி மகாவித்தியாலய மாணவிகளின் கிராமிய நடனம் இடம்பெற்றது. அடுத்து சிறப்புரையினை வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் நிகழ்த்தினார். அதனையடுத்து அழகியல்கல்லூரி ஆசிரியரும், யாழ்.நுண்கலைக்கல்லூரி மாணவியுமான காசினியின் நடன நிகழ்வு இடம்பெற்றது.அரசியல் துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கனின் சிறப்புரையைத் தொடர்ந்து திருமதி.நவமாலைசேகரி அவர்களின் வீணை இசை இடம்பெற்றது.பின்னர் அரசாங்க அதிபர் தி.இராசநாயகம் அவர்களது உரையும், மருத்துவப்பிரிவு மாணவிகளின் நாடகம், கிளி. மகாவித்தியாலய மாணவர்களின் நாடகம், ஆசிரியர் யோகேஸ்வரியின் சங்கீத இசை என்பன இடம்பெற்றன. (கு,ச)

# பூநகரிப்பிரதேசத்தில் இரு மரக்கறி கொள்வனவு நிலையங்கள்

## - அமைக்க ஆலோசனைக்கூட்டத்தில் முடிவு

(பூநகரி)

பூநகரியில் மரக்கறிக் கொள்வனவு நிலையம் அமைத்தல் தொடர்பான ஆலோசனை கலந்துரையாடல் கூட்டம் கடந்த வியாழக்கிழமை பிரதேச செயலர் மா.சிறிஸ்கந்தகுமார் தலைமையில் நடைபெற்றது. இக்கலந்துரையாடலில் பூநகரி 9 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் 3 வலயங்கள் வருடம் முழுவதும் பயிர் செய்யப்படும் வலயங்கள் எனவும் ஏனைய 6 வலயங்களும் பருவகாலத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும் வலயங்கள் எனவும் தீர்மானிக்கப்பட்டது. இவ் ஒன்பது வலயக் கொள்வனவு நிலையங்களும் கமக்கார அமைப்பு தலைமையில் நடைமுறைப்படுத்தப்படும்.

இவ்வொன்பது வலயங்களிலுமிருந்து பெறப்படும் மரக்கறிகள் பூநகரி ப.நோ.கூ. சங்கத்தின் மூலம் பூநகரி வட பகுதியிலும், பூநகரியில் தென்பகுதியில் உள்ளவை முழங்காவில் விவசாயக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமும் கொள்வனவு செய்யப்படும். இப் பூநகரி, முழங்காவில் ஆகிய இரு கொள்வனவு நிலையங்களையும், திறம்படச் செயற்படுத்துவதற்காக பிரதேச செயலர் தலைமையில் நிலையியல் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக்குழுவில் விவசாய பெரும்பாக உத்தியோகத்தர், விவசாய போதனாசிரியர் பிரதேசகமக்கார அமைப்புத் தலைவர், கமநலவிரிவாக்க அலுவலர், கிராம சேவையாளர்கள் ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இக் கலந்துரையாடலில் பெரும்பாக உத்தியோகத்தர் சுந்தரமூர்த்தி விவசாய போதானாசிரியர் திருமதி சத்திய நடராசா, மாவட்ட திட்டமிடல் அதிகாரி, கமக்கார அமைப்புகளின் தலைவர்கள் என பலர் தமது ஆலோசனைக் கருத்துக்களை வெளியிட்டனர். (34)

## பொருட்கள் வழங்கல்

இந்தியாவிலிருந்து நாடு திரும்பி மீளக்குடியமர்ந்துள்ள பெரியகடை, எழுத்தூர், கீரி, பட்டித்தோட்டம், தாழ்வுப்பாடு, சாவற்கட்டு போன்ற கிராமங்களில் வாழ்கின்ற மக்களுக்கு நேற்று முன்தினம் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனம் 7000 ரூபா பெறுமதியான பொருட்களை வழங்கியுள்ளது. (மி)

## தாயகம் திரும்பினர்

இந்தியாவிலிருந்து 14 பேர் நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து சிறிய படகுமூலம் தலைமன்னார் வந்தடைந்த இவர்களை தலைமன்னார் பொலிசார் நேற்று நீதிமன்றத்தில் முன்நிறுத்தினர். மன்னார் நீதிபதி அப்துல்லாவால் அவர்கள் அவர்களின் சொந்த இடமான ஜெயந்தி நகர், வவுனியா ஆகிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (மி)


## கேள்விகோரல்

யாழ்ப்பாணத் தொல்லியல் நூதனசாலைக் கட்டடத் திருத்த வேலை

15.09.2004 ஆம் திகதி பத்திரிகைகளில் பிரசுரமான மேற்படி கேள்வி கோரலில் பிரசுரிக்கப்பட்ட திகதிகள் பின்வருமாறு நீடிக்கப்பட்டுள்ளன.

கேள்விப் படிவங்களை 2004.10.22 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம் .

கேள்விகள் இவ் வலுவலகத்தில் பெறப்பட்ட கேள்விப் படிவத்தில் இணைப்பிரதிகளில் 2004.10.24 ஆம் திகதி பிற்பகல் 2.00மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

(சி-10490)



## புலிகளின்குரல் 14ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு...

# வானோசை-14 கலை இலக்கியப்போட்டி

புலிகளின் குரலின் 14ஆவது ஆண்டுநிறைவையொட்டி கலை இலக்கியப்போட்டிகள் நடத்தப்படவிருக்கின்றன.

வானொலி நாடகம், சிறுகதை,கவிதை ஆகிய துறைகளில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஆக்கங்கள் யாவும் தமிழீழ விடுதலையை முன்னெடுப்பனவாகவோ, சமூகமேம்பாடு கருதியனவாகவோ அமையவேண்டும்.

ஆக்கங்களை எழுதுதாளில் ஒருபக்கத்தில் மட்டும் எழுதவேண்டும்.

ஆக்கங்கள் எழுதுதாளில் கையெழுத்துப்பிரதியாகவோ , தட்டச்சுப்பிரதியாகவோ அனுப்பிவைக்கலாம்.

போட்டிக்கான ஆக்கங்களை எழுதுபவர்கள் தங்கள் பெயர், முகவரி ஆகியவற்றைத் தனியான தாளில் எழுதி, பிரதியோடு இணைக்கவேண்டும்.

எந்தப் போட்டிக்கான ஆக்கம் என்பதை கடிதஉறையின் இடது மேல் மூலையில் குறிப்பிட்டு அனுப்பிவையுங்கள்.

* வானொலி நாடகம்:-20 நிமிடங்களுக்கு அமைவாக எழுதப்படவேண்டும். எழுதுதாளில் 10 பக்கங்களுக்குக் குறையாமலும், 12பக்கங்களுக்கு மேற்படாமலும் பிரதி அமையவேண்டும்.

* சிறுகதை:- 04பக்கங்களுக்குக் குறையாமலும், 05 பக்கங்களுக்கு மேற்படாமலும் பிரதி அமையவேண்டும்.

* கவிதை:-03பக்கங்களுக்குக் குறையாமலும், 04பக்கங்களுக்கு மேற்படாமலும் பிரதி அமையவேண்டும்.

ஆக்கங்களை 31.10.2004 இற்கு முன் எமக்குக்கிடைக்கக் கூடியதாக அனுப்பி வையுங்கள். போட்டிகளில் கலை இலக்கிய ஆர்வலர்கள் அனைவரும் பங்கு பற்றலாம்.

ஆக்கங்களை அனுப்பவேண்டிய எங்கள் முகவரி:-
புலிகளின்குரல் நிறுவனம்,
நடுவப்பணியகம்,
யாழ்.சாலை, கிளிநொச்சி.

யாழ்ப்பாணம், வவுனியா,திருகோணமலை,மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் உள்ளவர்கள் போட்டிக்கான ஆக்கங்களை விடுதலைப்புலிகளின் அவ்வம்மாவட்டச் செயலகங்களூடாகவோ , அஞ்சல் மூலமாகவோ அனுப்பி வைக்கலாம். (சி-10275)

# ஈராக்கில் பொதுத்தேர்தல் நடத்தத் திட்டமிட்டுள்ள நிலையில் தாக்குதல்கள் தொடர்வது குறித்து கொபி அனான் கவலை

**சனவரி மாதத்தில் ஈராக்கில் பொதுத் தேர்தல் நடைபெற திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கும் நிலையில் கிளர்ச்சிவாதிகளின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெறுவதையிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபிஅனான் ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளார்.**

பகுதாவின் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குள்ளும் இரண்டு தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்றதையிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் அதிகாரிகளும் அமெரிக்க இராணுவத்தினரும் ஈராக்கிய இடைக்கால நிர்வாகத்தினரும் அதிருப்தியடைந்துள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற இத் தாக்குதலில் 3 அமெரிக்கர்கள் உட்பட 5பேர் உயிரிழந்துள்ளது தெரிந்ததே.

ஈராக்கில் தேர்தலை நடத்துவதற்கு உதவும் வகையில் பாக்தாத்திலுள்ள ஐக்கிய நாடுகள் நிலையம் பலப்படுத்தப்படவேண்டுமென்று புஷ் நிர்வாகமும் ஈராக்கிய இடைக்கால அரசாங்கமும் கோரிக்கை விடுத்துள்ளன.

6தேர்தல் ஆலோசகர்கள் உட்பட 25 தேர்தல் அதிகாரிகளை பாக்தாத்திற்கு அனுப்ப ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் உத்தேசித்துள்ளது. மொத்தமாக 100 அதிகாரிகளை அனுப்புவதற்கு தீர்மானித்த போதிலும் குறைந்தது 50 அதிகாரிகளையாவது அனுப்புமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

ஈராக்கில் உள்ள ஐக்கிய நாடுகள் நிலையத்தில் 35 பேர் மட்டுமே கடமையாற்றலாம் என தற்சமயம் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஈராக்கில் பஸ்ராப்பகுதியில் கடமையாற்றி வரும் பிரிட்டிஷ் வீரர்களை தேவையேற்படுமானால் பகுதாவிற்கும் பலூஜா நகருக்கும் இடமாற்றம் செய்வது பற்றி பிரிட்டிஷ் அரசாங்கம் ஆராய்ந்து வருகின்றது. 650 பிரிட்டிஷ் வீரர்கள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படக்கூடுமென்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.



பாக்தாத்தில் வீடுதிக்கும், வழிபாட்டுத்தலத்திற்கும் இடையில் கார்த் தரிப்பிடத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பின் சேதத்தை பாதுகாப்பு அதிகாரி ஒருவர் பார்வையிடுகிறார்.

### வாக்கு எண்ணுவது நிறுத்தம்

உத்தரப்பிரதேசத்தின் மென்பூரி மக்களவைத் தொகுதியில் நடைபெற்ற தேர்தலின் வாக்கு எண்ணும பணிகளை தேர்தல் ஆணையம் தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளது.



இஸ்ரேலிய விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட பலஸ்தீனிய இராணுவ வீரர் ஒருவரின் பூதவுடலைக் காவிச்செல்லும் உறவினர்.

## முதலைக் குட்டிகளைத் தேடி இஸ்ரேலில் வீடு வீடாகச் சோதனை

(ஜெருசலேம்)

இஸ்ரேலில் ஒரு முதலைப்பண்ணையில் இருந்து 60 இற்கும் மேற்பட்ட முதலைக் குட்டிகள் திருட்டுப்போய்விட்டன. அவை வீடுகளில் வளர்ப்பதற்காக விற்கப்பட்டுள்ளன.

இவை வளர்ந்ததும் ஆறுகளில், குளங்களில் விடப்படலாம் என்று அதிகாரிகள் பயப்படுகிறார்கள். முதலைப்பண்ணையில் இரண்டு மாதங் களுக்கு முன்பும் முட்டைகளில் இருந்து வெளிப்பட்ட குட்டிகள் திருட்டுப் போயிருந்தன .

இந்தக் குட்டிகள் 23 அடி நீளத்துக்கு வளரக்கூடியவை. ஒரு ஆண்டு ஆனதுமே இது கையைக் கடித்துக் குதறிவிடும். மூன்று ஆண்டுகளில் மிக அபாயகரமானவையாக மாறிவிடும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இதைத் தொடர்ந்து மத்திய இஸ்ரேலின் நகரங்களில் உள்ள வீடுகளில் அதிகாரிகள் சோதனை போட்டனர். அப்போது வீடுகளில உள்ள குளியல்தொட்டிகளிலும் தண்ணீர்த் தொட்டிகளிலும், பத்து முதலைக் குட்டிகள் இருந்தன. அவற்றை அதிகாரிகள் கைப்பற்றினர்.

## ஆப்கான் சனாதிபதித் தேர்தலில் ஹமீர்கர்சாய் முன்னணியில்

ஆப்கானிஸ்தானில் கடந்த வாரம் இடம் பெற்ற சனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளினை எண்ணும் நடவடிக்கைகள் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் இதுவரை எண்ணப்பட்ட வாக்குகளின் அடிப்படையில் 58 சதவீத வாக்குகளை ஹமீர் கர்சாய் பெற்று முதலிடத்தில் உள்ளார். ஹமீர் கர்சாயை எதிர்த்து 18 வேட்பாளர்கள் போட்டியிட்ட போதிலும் யூனூஸ் மற்றும் அப்துட் றசீட் ஆகிய இருவருமே 2ஆம், 3ஆம் இடங்களில் உள்ளனர்.

இது தொடர்பாக ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தூதுவா ஹல்மி கருத்து வெளியிடுகையில் சனாதிபதித் தேர்தலை நடத்தியதன் மூலம் ஆப்கானிஸ்தான் சரியான பாதையில் சென்று கொண்டிருக்கின்றதென்று குறிப்பிட்டுள்ளார்.

## இருபத்து நான்கு வடகொரியர் அடைக்கலம் கோரி சீனாவிலுள்ள தென்கொரியத் தூதரகத்தில் தஞ்சம்

(பீஜிங்)

சீனத் தலைநகர் பீஜிங்கில் உள்ள தென்கொரியத் தூதரகத்துள் வடகொரியாவைச்சேர்ந்த ஆண்களும், பெண்களுமாக 24 பேர் அத்துமீறி உள்ளே நுழைந்தனர். தென்கொரியாவில் அடைக்கலம் கோரி அவர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டனர்.

அவர்கள் தூதரகத்தின் கம்பி வேலிக்குள் புகுந்து சுவர் ஏறிக் குதித்து உள்ளே நுழைந்தனர். அவர்களில் 14பேர் பெண்கள், 4 பேர் சிறுவர்கள், ஆண்கள் 6பேர் இருந்தனர்.

வடகொரியாவில் நிலவும் வறுமைக்கும், கொடுமைக்கும் பயந்து ஒரு லட்சம் வடகொரியர்கள் அந்த நாட்டை விட்டுத் தப்பியோடி சீனாவிலும், மற்ற தென்கிழக்காசிய நாடுகளிலும் தலைமறைவு வாழ்க்கை வாழ்கிறார்கள்.

சட்டவிரோதமாகச் சீனாவுக்குள் நுழைந்தவர்களைத் திருப்பி அனுப்ப வடகொரியாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டுள்ள போதிலும், தூதரகங்களுக்குள் நுழைந்தவர்களை 3ஆவது நாடு வழியாகத் தென்கொரியா செல்லச் சீனா அனுமதித்து வருகிறது.



பலஸ்தீனியர் ஒருவர் ஜெருசலேமில் இஸ்ரேலிய எல்லைப் பொலிசாரிடம் தனது அடையாள அட்டையைக் காட்டுகின்றார்.



வடகொரியாவீற்கும், தென்கொரியாவீற்கும் இடையில் உள்ள எல்லைப் பிரதேசத்தில் வடகொரிய வீரர்கள் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

### இலங்கை- இந்தியாவிற்கிடையே

## கடலடி தொலைத்தொடர்புச் சேவை விரைவில் ஆரம்பிக்குமென்கிறார் தயாநிதி மாறன்

(புதுடில்லி)

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையே கடலடித் தொலைத் தொடர்புச் சேவை விரைவில் ஏற்படுத்த மத்தியரசு திட்டமிட்டுள்ளதாக மத்தியமைச்சர் தயாநிதி மாறன் அறிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட அவர் இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையேயான சர்வதேச நீண்ட தொலைத்தொடர்பைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் இவ்வாறு கூறியுள்ளார்.

## பெற்றோல் விலை அதிகரிக்காது

(புதுடில்லி)

பெற்றோலியப் பொருட்களின் விலைகளை தற்போது உயர்த்துவதில்லை என்று இந்தியாவின் மத்திய அமைச்சரவையின் பொருளாதார விவகாரக்குழு முடிவு செய்துள்ளது.

### முதலமைச்சராக மீண்டும் ஜிகாங்சுபாங்

(புதுடில்லி)

அருணாச்சலப் பிரதேசத்தின் முதலமைச்சராக ஜிகாங் சுபாங் 7ஆவது முறையாகப் பதவி ஏற்கவுள்ளார்.

அருணாச்சலச் சட்டப் பேரவைத தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதையடுத்து, காங்கிரஸ் சட்டமன்றத் தலைவராக சுபாங் ஒரு மனதாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

அது மட்டுமன்றி வெற்றி பெற்றுள்ள பெரும்பான்மை சுயேட்சை உறுப்பினர்களும் சுபாங்கிற்கு ஆதரவு தெரிவித்துள்ளனர்.

இதனால் சுபாங்கை முதலமைச்சராகப் பதவியேற்க மாநில ஆளுனர் அழைப்பு விடுத்துள்ளார்.

## அர்ஜுன் டாங்கிகள் சகிதம் விரைவில் போர் ஒத்திகை

(சென்னை)

சென்னை ஆவடித்தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு புதிதாக, இராணுவத்தில் சேர்க்கப்பட்டுள்ள அர்ஜுன் டாங்கிகள் மற்றைய டாங்கிகளுடன் ஒப்பிடும் போது, எந்தவகையில் சிறந்தது என்பதைக் கண்டறிய எதிர்வரும் டிசம்பர் மாதம் போர் ஒத்திகை நடத்திப் பார்க்கவுள்ளதாக இந்திய இராணுவத் தளபதி என்.சி.விஷ் கூறியுள்ளார்.

நேற்றுப் புதுடில்லியில் இராணுவத் தொழில்நுட்ப மையத்திற்கு அடிக்கல் நாட்டிய பின்னர் செய்தியாளர்களிடம் இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## மனு நிராகரிப்பு

(புதுடில்லி)

சிவகாசி ஜெயலட்சுமியின் வழக்கை சி.பி.ஐ விசாரணைக்குட்படுத்தக் கூடாது என்று தமிழக அரசு தாக்கல் செய்த மேல் முறையீட்டு மனுவை உச்சநீதிமன்றம் நேற்று முன்தினம் நிராகரித்துள்ளது.

# முல்லைத்தீவுக் கரையோரம் தற்காலிக வெளிச்சவீடு அமைக்க நடவடிக்கை!

## -நிரந்தரமாக அமைக்க அரசு தொடர்ந்தும் தடை


(முல்லை)

**முல்லைத்தீவில் தற்காலிகமாக வெளிச்சவீடு அமைக்க அரச அதிபர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் வேண்டுகோளுக்கமையவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவில் நீண்டகாலமாக நிலவிவரும் வெளிச்சவீட்டுப் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படாமல் இருப்பதால் மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பிரச்சினைகளைத் தற்காலிகமாகவாவது தீர்ப்பதற்காக முல்லை. மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசத்தினர் மகஜர் ஒன்றினை முல்லை. மாவட்ட அரச அதிபரிடம் வழங்கியுள்ளனர்.

அதனை ஏற்றுக்கொண்ட அரச அதிபர் செலவு விபரங்களுடன் திட்டம் ஒன்றைத் தயாரித்துத் தரும்படி கேட்டுக்கொண்டுள்ளார். இதற்கமைய தற்காலிகமாக வெளிச்ச வீடு அமைப்பதற்கான நிதிவசதிகளைச் செய்து தருவதாக முல்லை. மாவட்ட அரசஅதிபர் திருமதி இமெல்டா சுகுமார், தெரிவித்தார். முல்லை.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்க சமாசம்திட்டம் தயாரிப்பதற்கான நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

முல்லைத்தீவுக் கரையோரத்தில் வெளிச்ச வீடு ஒன்றை அமைக்க பலதடவைகள் கோரப்பட்ட போதிலும் சிறிலங்கா அரசு அதற்கான அனுமதியை வழங்க மறுத்து வருகிறது. இந்நிலையில் மீனவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைக் கருத்திற்கொண்டு தற்காலிக வெளிச்சவீடு அமைக்கும் நடவ டிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (20)



வட்டக்கச்சி கட்சன் வீதிச் சந்திப் பாலம் நீண்டகாலமாக புனரமைப்பு வேலைகள் எதுவும் நடைபெறாமல் உள்ளது. இப்பாலத்தின் ஊடாகப் பயணிக்கும் போது வீதி விபத்துக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இச்சந்திக்கு அண்மையாக பல வர்த்தக நிலையங்களும், வைத்தியசாலை,பாடசாலை,கோவில் என்பன அமைந்துள்ளன. இப்பாலத்தைப் பாதுகாப்பான முறையில் அமைக்க நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். (படம்.ரூபன்)

# மண்ணரிப்பிற்குள்ளான பாலத்தில் கன்ரர் விபத்துக்குள்ளானது

(அக்கராயன்)

ஸ்கந்தபுரம் சந்தை வீதிப் பகுதியின் மண்ணரிப்பிற் குள்ளாகிய பாலப்பகுதியில் கடந்த வியாழனன்று நள்ளிரவு 12.30 மணியளவில் கன்ரர் ரக வாகனம் ஒன்று விபத்துக்குள்ளானது. இதில் கன்ரர் வாகனத்தின் முன்பகுதி சேதத்திற்குள்ளானது. இப் பாலப் பகுதியில் இதற்கு முன்னரும் பல விபத்துக்கள் இடம்பெற்றிருந்தமை. இங்கு குறிப்பிடத்தக்கது. எனவே இப் பாலத்தினை உடனடியாகப் புனரமைத்துத் தருமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்கின்றனர். (15)

# வந்தாறு மூலையில் பேருந்து விபத்து குடும்பப் பெண் பலி;ஐவர் காயம்!


மட்டக்களப்பு வாழைச்சேனை வீதி வந்தாறு மூலையில் நேற்று முன்தினம் நண்பகல் இடம் பெற்ற பேருந்து விபத்தொன்றில் 50 வயதுடைய குடும்பப் பெண்ணொருவர் பலியானார். மேலும் பெண் உட்பட 5 பேர் காயமடைந்துள்ளார் கள்.

வாழைச்சேனையிலிருந்து மட்டக்களப்பு நோக்கிவந்த இ.போ.ச. பேருந்து வண்டியொன்றே இந்த விபத்திற்கு உள்ளானது. வேகமாக வந்த பேருந்து பாதையை விட்டு விலகி கிழக்குப் பல்கலைக் கழகத்திற்கு அருகிலுள்ள காணியொன்றிற்குள் குடைசாய்ந்தது. இப் பேருந்தில் 40 இற்கும் மேற்பட்ட பயணிகள் பயணம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. பலியானவர் வாழைச்சேனையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை லக்சுமி என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

# போரூட் ,ஒக்ஸ்பாம் நிதியுதவியில் 154 பயனாளிகளுக்கு உதவி

போரூட் நிறுவன நிதி உதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகஅனுசரணையுடன் புனர்வாழ்வு நிறுவனத்தினால் மாவடிக் கிராமத்தில் வருமான அதிகரிப்புத் திட்டத்திற்கான நிகழ்வு மு.குமாரசாமி தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நடமாடும் வியாபாரம் செய்யும் மூன்று பேருக்கு துவிச்சக்கர வண்டிகளும் நடமாடும் வியாபாரம் செய்வதற்கு ஒருதொகைப் பணமும் வழங்கப்பட்டது. அத்தோடு போரூட் நிறுவன நிதி உதவியுடன் ஒரு பயனாளிக்கு கிளி/ கிழக்கு புனர்வாழ்வுக் கழகத்தினரால் தையல் இயந்திரம் வழங்கப்பட்டது. தொடர்ந்து மாயனூர் கிராமத்திற்கு உட்பட்ட



150 பயனாளிகளுக்கு ஒக்ஸ்பாம் நிறுவன நிதி உதவியுடன் கிளி/ கிழக்கு புனர்வாழ்வு நிறுவனத்தினரால் 150 மட்டை கிடுகு விகிதமும் மற்றும கிடுகு வேய்வதற்குரிய கயிறு, ஈர்க்கு என்பனவும் வழங்கப்பட்டன (12)

## -பள்ளமடு, வெள்ளாங்குளம் பகுதிகளிலுள்ள-

# இரு வைத்தியசாலைகளுக்கு ஒரு மருத்துவர் சிகிச்சை பெறுவதில் நோயாளர் சிரமம்

பள்ளமடு, வெள்ளாங்குளம் வைத்தியசாலைகள் அண்மையில் நிகொட் நிதியுதவியுடன் 18மில்லியன் ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் திறக்கப்பட்ட போதிலும், மருத்துவரின் பற்றாக்குறை காரணமாக இப் பகுதியிலுள்ள 1500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் போதியமருத்துவ வசதிகளைப் பெறமுடியாமல் பெரும் கஷ்டப்படுகின்றன.

இவ்விரு வைத்தியசாலைகளுக்கும் ஒரே ஒரு வைத்தியர் மட்டும் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை முருங்கன் மாவட்ட வைத்தியசாலையிலும் ஒரே ஒரு சிங்கள மருத்துவர் கடமையாற்றுவதனால் நோயாளர்கள் மருத்துவ சேவையைப் பெறமுடியாமல் கஷ்ரப்படுகின்றனர்.(மி)

# மாவீரர்,போராளி குடும்பங்களை ஊரக வளர்ச்சிப்பிரிவு சந்திப்பு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேசத்தில் ஊரக வளர்ச்சிப் பிரிவு போராளி, மாவீரர் குடும்பங்களை சந்தித்து கலந்துரையாடல் ஒன்று மாயவனூர் ஊரக வளர்ச்சிக்கிராம பொறுப்பாளர் பொ.கண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

கடந்த 12 ஆம் திகதி காலை 11 மணி தொடக்கம் மாயவனூர் பகுதி மக்களுடனான சந்திப்பும், 14 ஆம் திகதியன்று காலை தொடக்கம் மாலைவரையுமாக 10 வீட்டுத்திட்டப் பகுதியில் சந்திப்புகள் இடம் பெற்றன. மற்றும் மாலை 5 மணி அளவில் பொது மக்களுக்கான பொதுக் கூட்டமும் நடைபெற்றது. இக்கூட்டமானது கிராமப் பொறுப்பாளர் பொ.கண்ணன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு ஊரகவளர்ச்சிப் பொறுப்பாளர் கந்தனும் ஊரக வளர்ச்சித்துறை துணைப் பொறுப்பாளர் விபுலனும் வருகை தந்து சிறப்பித்தமையும் கருத்துரைகளை கந்தன் வழங்கி சிறப்பித்தமையும் குறிப்பிடத்தக்கது. (12)

# தேராவில் கிராமமக்களுக்கு சுயதொழிலுக்குப் பொருட்கள் வழங்கல்

(உடையார்கட்டு)

கெயார்-எக்கோ நிதிப்படுத்தலுடன் சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவனத்தால் தேராவில் கிராம மக்களுக்கு பயிர்ச்செய்கை, சுயதொழில் முயற்சிகளுக்கான பொருட்கள் வழங்குவதற்கான ஒன்றுகூடல் கடந்த 2 ஆம் திகதி நடைபெற்றது.

ஒன்றுகூடலானது சமூக பொருளாதார வளர்ச்சி நிறுவன இணைப்பாளர் யூட் தலைமையில் இடம் பெற்றது. இதில் கெயார் எக்கோ முல்லை மாவட்டத் திட்டப்பணிப்பாளர் கணேசலிங்கம் கருத்துரை வழங்கியதையடுத்து தெரிவுசெய்யப்பட்ட 109 பயனாளிகளுக்குப் பொருட்கள் வழங்கப்பட்டன.

இதில் நெற்செய்கை பயனாளிகள் 15, சிறுதானியப் பயனாளிகள் 53, வீட்டுத்தோட்டப் பயனாளிகள் 23, ஆடு வளர்ப்புப் பயனாளிகள்16, மீன்பிடி பயனாளிகள் 02 என்ற வகையில் வழங்கப்பட்டன .

நெற்செய்கை,சிறுதானிய, வீட்டுத்தோட்டப் பயனாளிகளுக்கு உள்ளீடுகளும், மண்வெட்டி போன்ற கருவிகளும் வழங்கப்பட்டன. (19)

# ஜெயபுரம் முடக்கன் ஆற்றுப் பாலம் அமைக்கும் பணியில் தாமதம் ஏன்?

ஜெயபுரம்- வன்னேரிக்குளம் பிரதான வீதியிலுள்ள முக்கிய பாலமொன்றைத் திருத்த எடுக்கப்பட்ட ஆரம்பகட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளமையால் இப் பகுதி வீதிப் போக்குவரத்து பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

ஜெயபுரம் பிரதான வீதியில் முடக்கன் ஆறு பாயும் பகுதியில் பாலம் அமைப்பதற்கான தேவை குறித்து உணரப்பட்ட போதிலும் அதற்கான ஆரம்பவேலைகள் நடைபெற்று நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

பாலம் அமைப்பதற்கான விளம்பரப்பலகை போடப்பட்டு நான்கு மாதங்களைக் கடந்து விட்ட நிலையில் இன்னும் அதற்கான வேலைகள் நடைபெறா திருப்பதானது வரப் போகும் மாரிகாலத்தில் மக்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்க இடமுண்டு.இந்தப் பாலம் அமைக்கப்படும் பகுதிக்கு அண்மையாக கனரக வாகனமொன்றும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் பாலம் அமைப்பதற்குத் தேவையான பொருட்களும் அப்பகுதியில் ஏற்கனவே கொண்டு வந்து இறக்கப்பட்டுள்ளது.இருந்தும் குறித்த பாலத்தை அமைக்கும் நடவடிக்கைகள் ஏன் ஆரம்பிக்கப்படவில்லையென மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.





# திருடர்களின் தொல்லை தென்மராட்சியில் அதிகரிப்பு

தென்மராட்சியில் உள்ள நுணாவில் பகுதிகளில் திருடர்களின் தொல்லை அதிகரித்து வருகின்றதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் வீடுகளினுள் அத்துமீறி நுழைந்து வீட்டிலிருப்போரை மிரட்டிவிட்டு, திருடுதல், வீதிகளால் செல்வோரை வழிமறித்து அவர்கள் வசமுள்ள பொருட்களைப் பறித்துச்செல்லுதல், பொது மக்களின் காணிகளுள் புகுந்து அங்கிருக்கும் பயன்தரு மரங்களைத் தறித்துச்செல்லுதல், ஆள்நடமாட்டமற்ற பகுதிகளில் உள்ள கைவிடப்பட்ட தனியார் வீடுகளின் கதவு, நிலை, யன்னல் என்பவற்றைப் பிடுங்கி எடுத்தல் என திருடர்களின் அடாவடித் தனங்கள் நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

இது குறித்து சிறிலங்காப் பொலிசருக்கு பொதுமக்கள் முறையிட்டுள்ள போதும் அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்காதிருக்கின்றமையால் மக்கள் விசனமடைந்துள்ளனர். (33)

# கோகிலாக்கண்டி, மறவன்புலவில் பெரும்போக நெற்செய்கை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்கில் படையினரால் பயிற்செய்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்ட 1000 ஏக்கர் நிலப்பரப்புக்களில் அப்பகுதி விவசாயிகள் பெரும்போகப் பயிர்ச்செய்கையினை ஆரம்பித்துள்ளனர்.

தென்மராட்சி தெற்கிலுள்ள கோகிலாக்கண்டி, மறவன்புலவு, தனங்கிளப்பு ஆகிய பிரதேசங்களை உள்ளடக்கிய விளை நிலங்கள் இராணுவ உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து முடக்கி வைத்திருந்த படையினர், மேற்படி பகுதிகளில் உள்ள 1000 ஏக்கர் விளை நிலங்களில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ள அண்மையில் அனுமதித்தனர்.

இவ்வாறு படையினரால் அனுமதிக்கப்பட்ட பிரதேசங்களில் 8 வருடங்களுக்குப் பின் அப்பகுதி விவசாயிகள் மீண்டும் பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (33)

# சமூக அபிவிருத்தித் திட்ட ஒப்பந்தத்தில் த.பு.கழகமும் கிளி.அரச அதிபரும் கைச்சாத்து



**ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் நிகொட் கருத்திட்டத்தினால் மேற்கொள்ளப்படும் சமூக அபிவிருத்தித்திட்டத்தின் இரண்டாம் கட்டம் செயற்படுத்துவதற்கான ஒப்பந்தம் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்திற்கும், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபருக்குமிடையில் நிகொட் மாவட்டப் பணிப்பாளர் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.**

தெரிவுசெய்யப்பட்ட எள்ளுக்காடு, கோயில்வயல், விநாயகபுரம், காஞ்சிபுரம் ஆகிய கிராமங்களில் போரினால் பாதிக்கப்பட்ட அடிப்படை வசதிகள் குறைந்த இக்கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் வீதி புனரமைப்பு, குடிநீர் வசதிகளை ஏற்படுத்தல், கல்வி மேம்படுத்தல் ,பொதுக் கட்டடத் தொகுதி, வருமான அதிகரிப்புத் திட்டம், குழுக்களுக்கான வலுப்படுத்தல் பயிற்சி, சுகாதார மேம்படுத்தல் ஆகிய திட்டங்களை மேற்கொள்வதற்கு ஆசிய வங்கி 22 மில்லியன் ரூபாவை இத்திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.

இத்திட்டத்தினை மேற்கொள்வதற்கு பங்காளி நிறுவன கிளி.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவு செய்யப்பட்டு, நேற்று முன்தினம் மாலை 5.00 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச செயலகத்தில் அரச அதிபர் தி.இராசநாயகம் அவர்களும், கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் வ.றீகன் அவர்களும் கைச்சாத்திட்டுள்ளனர். அவர்களுடன் அரச தரப்பு பிரதிநிதியாக நிகொட் திட்ட பிரதிப்பணிப்பாளர் க.பார்த்தீபன் அவர்களும், தமிழர் புனர்வாழ்வுக்கழக நிகொட் செயற்திட்ட இணைப்பாளர் க.ரவிக்காந் அவர்களும் கைச்சார்த்திட்டுள்ளனர்.

நிகொட் திட்ட உதவித்திட்டப் பணிப்பாளர் செல்வி.சோ.துஸ்யந்தினி அவர்களும், தமிழர் புனர்வாழ்வுக்கழக பொறியியலாளர் இ.செந்தூரன் அவர்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்நிகழ்வின் இறுதியில் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டது.

# 35 வருடங்களாக புனரமைப்பின்றி இருக்கும் புங்குடுதீவு- இறுப்பிட்டி வீதி

(யாழ்ப்பாணம்)

யாழ். தீவகத்தில் உள்ள புங்குடுதீவு, இறுப்பிட்டி வீதி கடந்த 35 வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாது சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது.

மிகமோசமாகச் சேதமடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படும் இவ் வீதியூடாகப் பயணிப்போர் பலத்த இடர்பாடுகளை அனுபவிக்கின்றனர்.

இவ் வீதியின் நிலை குறித்து அப்பகுதி மக்கள் பலதரப்பினரிடமும் முறையிட்டும் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை என விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (33)

# யாழ். பொலிஸ் நிலையத்திற்கு முன்னாலுள்ள பிரதான கழிவு நீர் வாய்க்கால் துர்நாற்றம்

யாழ். பொலிஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள கழிவு நீர் வாய்க்கால் நீண்ட காலமாக சுத்திகரிக்கப்படாத நிலையில் காணப்பட்டதால் அது துர்நாற்றம் வீசுகின்றது. யாழ்நகர கழிவு நீரினை பண்ணைக் கடலுக்குள் பாய்ச்சும் பிரதான வாய்க்காலின் ஒரு பகுதி யாழ். பொலிஸ் நிலையத்தின் முன்பாக காணப்படுகின்றது.

இதனை பொலிசார் யாழ். பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பு வலயத்துள் உள்வாங்கி அவ் வடிகாலினைச் சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் சுத்தம் செய்ய முடியாதவாறு முட்கம்பி வேலியை அமைத்துள்ளனர்.

இதனால் இவ்வடிகால் நீண்ட காலமாகச் சுத்தம் செய்யப்படாத நிலையில் காணப்படுவதனால் கழிவு நீர் தேங்கி நின்று அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகின்றது. இதனால் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள வீதிகளால் செல்வோர் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர். (33)

# சைவப்புலவர் தேர்வுக்கு 31 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குக

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் இளஞ்சைவப் புலவர் / சைவப் புலவர் தேர்வு 2005ஆம் ஆண்டு ஏப்ரல் கடைசி வாரத்தில் நடைபெறவுள்ளது. இத்தேர்வுக்கான விண்ணப்ப இறுதி நாள் எதிர்வரும் 31ஆம் திகதியாகும். தேர்வுக்குத் தோற்ற விரும்புவோர் சைவப் புலவர் சங்கம் 125, அரசடி வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரியில் பாடவிதானம், படிவம் என்பனவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என தேர்வுச் செயலர் வ. கந்தசாமி அறியத் தந்துள்ளார். (33)

# -மனிதஉரிமை அதிகாரி மீதான தாக்குதல் குற்றவாளிகளை இனங்காணாதவாறு காப்பாற்ற பலதரப்பு முயற்சி

யாழ்.பொலிஸ் நிலையப்பகுதியில் வைத்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு வின் அதிகாரிகள் தாக்கப்பட்ட சம்பவத்தில், குற்றவாளிகளை இனங்காணாதவாறு காப்பற்ற பல தரப்பட்ட மட்டங்களில் இருந்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

குறிப்பாகக் கடந்த புதன் மற்றும் வியாழக்கிழமைகளில் யாழ்.நீதிமன்றில் நடாத்தப்பட்ட அடையாள அணிவகுப்புக்களின் போது பொலிசாரை மாற்றியமைத்ததாக, மனித உரிமைகளுக்கான சட்டத்தரணி எம்.ரெமீடியல் நீதிவானின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

கடந்த புதன்கிழமை இடம் பெற்ற அடையாள அணிவகுப்பின் போது தம்மைத் தாக்கியவர்களெனக் கூறிப் பொலிசார் இருவரை இணைப்பதிகாரி ஆர்.பி.றுவன் சந்திரசேகர அடையாளம் காட்டியிருந்தார். ஆயினும் அவர்கள் இருவரும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிசார் எனவும், அடையாள அணிவகுப்புக்கென அழைத்து வரப்பட்டிருந்தவர்களெனவும் பொலிஸ் தலைமை நீதவான் முன்னிலையில் வலியுறுத்திக் கூறியிருந்தார்.

ஆயினும் அடையாள அணிவகுபபின் பின்னர் யாழ்.பொலிஸ் நிலையத்திற்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்றில் அடையாளங் காட்டப்பட்ட குறித்த பொலிசார் இருவரும் பயணிக்கத்தயாராக அமர்ந்திருந்தமை ஆணைக்குழு அதிகாரிகளால் அவதானிக்கப் பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாகச் சட்டத் தரணி எம்.ரெமீடியஸ் நீதிவானின் கவனத்திற்குக் கொண்டு வந்திருந்ததையடுத்துத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்ற 27 ஆம் திகதி காலை 6.00 மணிமுதல் மறு நாள் 28 ஆம் திகதி காலை 6.00 மணி வரையான 24 மணி நேரம் யாழ்ப்பாணம் மற்றும் கொடிகாமம் பொலிஸ் நிலையங்களில் கடமையிலிருந்தவர்களது பூரண விபரத்தைத் திங்கட்கிழமை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதனிடையே அடையாளங் காட்டப்பட்ட மூன்று பொலிசாரிற்கு எதிராகவும், வழக்குகளைத் தாக்கல் செய்வது தொடர்பாகச் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

# யாழ். குடாநாட்டு மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு இவ்வாண்டு 200 மில்லியன் ரூபா செலவு

## -கல்வித் திணைக்கள தகவல் தெரிவிக்கின்றது

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென இவ்வாண்டு ஆரம்பத்திலிருந்து கடந்த மாதம் வரை 200மில்லியன் ரூபா நிதிச்செலவு செய்யப்பட்டிருப்பதாக கல்வித் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பல்வேறு தொண்டர் அமைப்புகளிடமும் இருந்து பெறப்பட்ட இந் நிதி கடந்த கால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் பாதிக்கப்பட்ட பிரதேச மாணவர்களின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கான செயற்றிட்டங்களை மையமாகக்கொண்டே செலவிடப்பட்டுள்ளது.

ஆனாலும் யாழ்.குடாநாட்டு மாணவர்களின் கல்வி அபிவிருத்தி மந்த கதியிலேயே இருப்பதாகவும், இதற்கு குடாநாட்டில் உள்ள வளப்பற்றாக்குறைகள் இராணுவ, அரசியல் நெருக்கடிகளே காரணம் எனவும் பல தரப்பட்ட கல்வி அபிவிருத்தி ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (33)

# சாவகச்சேரிப்பகுதியில் இரவு வேளை ரோந்து சுற்றும் பொலிசாரின் அடாவடி

## -மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இரவு நேரங்களில் சிறிலங்காப் பொலிசாரின் அட்டகாசங்கள் அதிகரித்து வருவதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திலிருந்து தினமும் இரவு வேளைகளில் ரோந்து செல்லும் பொலிசார் மதுவை அருந்தி விட்டு தகாத வார்த்தைகளால் உரக்கச் சிங்களத்தில் பேசியவாறே இரவில் ரோந்து செல்வதுடன், வீதி ஓரங்களில் உள்ள காணிகளின் வாயிற்கதவுகளை உதைத்தும் வீட்டுக் காணிகளுக்குள் நின்றவாறு குரைக்கும் நாய்களுக்கும் கல்லால் எறிந்தும் அட்டகாசங்கள் செய்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இரவு நேர அமைதியைக் குழப்பி மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தும் விதமாகப் பொலிசார் நடந்து கொள்வது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

'பொடா' மறைவு



# தமிழக முதல்வரின் அராஜக ஆட்சிக்கே தங்கத் தாமரை விருது!

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவிற்கு ஐ.நா.சபையின் சர்வதேச அமைப்பின் சார்பாக விருது வழங்கப்பட்டுள்ளது. சாதாரண விருது அல்ல. தங்கத்தாமரை விருது. "விளக்கு மாற்றுக்கு பட்டுக்குஞ்சம்" என்பது போன்று தான் விருது வழங்கப்பட்டதை யிட்டு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

உண்மையில் தமிழக முதலமைச்சருக்கு ஏன் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது என்று வகை புரியாது தலைமுடியைப் பிய்த்துக் கொள்பவர்கள் தான் ஏராளம். ஏனெனில் இந்த விருதைப் பெற்றுக்கொள்ளும் தகுதி தமிழக முதலமைச்சருக்கு இல்லை என்பதே அதன் பிரதான காரணம்.

என்றாலும் விருது வழங்கப்பட்டுள்ளமைக்கு பலவாறான காரணங்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றன.

தமிழகத்தில் தற்போது பாலியல் பிரச்சினையே தலைவிரித்தாடுகின்றது. தமிழக அமைச்சர்கள் பாலியல் பிரச்சினையால் சிக்கிப் பதவியைப் பறிகொடுக்கும் அபாய விளிம்பில் இருக்கின்றார்கள்.

இதேபோன்று தமிழக காவல் துறையில் சிறியவர் முதல் பெரியவர் வரையான அதிகாரிகள் பாலியலில் மூழ்கி கரைசேரமுடியாது தவிக்கின்றார்கள். முத்திரைத் தாள் மோசடியும் தமிழகத்தில் தாண்டவமாடுகின்றது. தமிழக மாவட்டப் பொலிஸ் தலைமை அதிகாரி முகமது அலி சிறையில் இருப்பது இந்தவகையே!.

எனவே இத்தகைய தரமான (?) அமைச்சரவையினையும் கண்ணியமான (?) காவல்துறையினையும் நீதியினையும் கட்டிக்காப்பது தமிழக முதலமைச்சர் தானே!. அதனால் தான் அவருக்குத் தங்கத் தாமரை விருது வழங்கப்பட்டுள்ளதாக ஒருவகை விமர்சனம்.

பொடோ சட்டத்தைத் தீவிரவாதிகளுக்கு எதிராக மட்டும் தான் பயன்படுத்துவதாக பாரதிய ஜனதாவின் தேசிய சனநாயகக் கூட்டணி கூறியிருந்தது.

ஆனால் தமிழக முதலமைச்சரோ பொடோ சட்டத்தை அரசியல் இலாபத்திற்காக மட்டுமே பயன்படுத்தினார். அரசியலில் கறைபடியாதவர் என்று புகழப்படும் வைகோ உள்ளிட்ட ம.தி.மு.க வினரை பழிவாங்கும் போக்கில் பொடோ சட்டத்தில் தள்ளினார்.

இதுவரை பொடோ மறு ஆய்வுக் குழுவின் உத்தரவுகளை நிராகரித்து, வைகோ மீதான வழக்கைத் திரும்பப் பெறமுடியாது என்று பிடிவாதம் செய்து வருகிறார்.

எனவே தமிழக முதலமைச்சரது பார்வையில் அரசியல் வாதிகள், பாடசாலை மாணவர்கள் தான் தீவிரவாதிகளாகத் தெரிகின்றார்கள். ஏனெனில் அவர்கள் தான் இதுவரை பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

எனவே அரசியல்வாதிகளும், மாணவர்களும் மட்டுமே தீவிரவாதிகளாக தமிழக முதலமைச்சரது கண்களுக்கு தெரிவதனால், அவரது பார்வைக் குறைபாட்டிற்குத் தான் விருது வழங்கப்பட்டுள்ளதோ...?

அத்துடன் இன்றும் பொடோ சட்டம் இரத்துச்செய்யப்பட்டது தவறு தவறுஎன்று தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருப்பதற்காகவா... அல்லது அரசியலில் பொடோ சட்டம் இல்லாது எவ்வாறு காலம் தள்ளுவது என்று நொந்து நூலாகிப் போயுள்ளவருக்கு ஆறுதல் படுத்தும் மருந்தோ, இந்த விருது?

திரைப்படத்துறையில் இருந்து வந்தவர் ஜெயலலிதா. ஆனால் அதனை அவர் மறந்து விட்டார் என்பதனால் தான், சினிமாத் துறையினருடன் கடந்த மூன்று வருடங்களாக பனிப்போர் நடத்தினார். அவர்களுக்கான ஆண்டுக்கான 21 பேருக்கு வழங்கும் விருதை 2000 ஆண்டு தொடக்கம் நிறுத்தியும் வைத்திருந்தார்.

இத்தனைக்கும் தனது கட்டாய மழைநீர் சேகரிப்புத் தொடர்பான விளம்பரங்களில் நடிகர்கள் நடிக்க மறுத்ததே காரணம் என்றும், ரஜினிகாந்த், விஜயகாந்த் அரசியலுக்கு வரமுயற்சிப்பதை விரும்பவில்லை என்றும் காரணம் கூறப்பட்டது.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தல் முடிவுகளின் அடியின் ரணம் தான், மீண்டும் திரைப்படத் துறையினருக்கான விருது அறிவிப்பு.

நடிகையாக இருந்தும், திரைப் படத்துறையினருக்குரிய மரியாதை வழங்காத கெடுபிடிக்குத் தான் விருதோ...?

அரச ஊழியர்களையும், ஆசிரியர்களையும் அவமதித்து, அவர்கள் போராட்டம் செய்வதற்கு உரிமை இல்லை என்று கூறி, தொழிற்சங்கங்களையும் இரத்துச் செய்து ஊழியர்களை அந்தரத்தில் தவிக்க விட்டவர்.

அது மட்டுமன்றி அவர்களது சலுகைகளை நிறுத்தி, அவர்களது உரிமைகளை கேள்விக்குறியாக்கியவர்.

எஸ்மா சட்டம், டெஸ்மா சட்டம் என்பவற்றை அரச ஊழியர்கள் மீது ஏவி, அவர்களைக் கைது செய்து பல நாட்கள் சிறையிலும் வாட வைத்தவர்.

அத்துடன் போராட்டம் நடத்திய அரச ஊழியர்கள், ஆசிரியர்களை டிஸ்மிஸ் செய்து பல உயிர்களை காவு கொண்டவர்.

நேற்றுவரை 900 அரச ஊழியர்கள், ஆசிரியர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளாது பின்னடிப்புக் காட்டிய போதும் மக்களவை முடிவுகளையடுத்தே 900 பேரையும் மன்னித்து விட்டதாக சேவைக்கு உள்வாங்கியவர். கடந்த மக்களவைத் தேர்தலில் அரச ஊழியர்கள் ஆசிரியர்களது பெயர்களை வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கி மோசடியும் செய்தார்.

எனவே பல ஆசிரியர்கள், அரச ஊழியர்களது உயிர்கள் பலியாகக் காரணம் என்பதற்காகவும், அரச ஊழியர்களை மதிக்காமை எனும் பண்புகளுக்காகத்தான் இந்த விருதை ஜெயலலிதா பெற்றுக் கொள்வதற்குரிய தகுதியை பெற்றுவிட்டாரா...?

பத்திரிகைகள் தான் உண்மையின் மறுவடிவம். ஆனால் பத்திரிகைகள் மீது தமிழக முதலமைச்சர் போடாத வழக்கில்லை. பத்திரிகைத்துறை என்பதே அவருக்கு எட்டிக்காய்தான். பத்திரிகையில் எந்த ஆசிரியர் அல்லது நிருபர் தன்னைப்பற்றிய உண்மைகளைப் புட்டுப்புட்டு வைக்கின்றார்களோ அவர்கள் எல்லோர் மீதும் வழக்குத் தான்.

மிகவும் கடுமையாக நக்கீரன் பத்திரிகையாசிரியர் கோபால் பொடோ சட்டத்தில் கைது செய்யப்பட்ட கொடூரமும் நடந்திருக்கின்றது.

அண்மையில் பி.பி.சி நிருபர் கரன்தப்பார் தமிழக முதலமைச்சரைப் பேட்டி கண்டிருந்தார். அதுவும் கொஞ்ச நெஞ்ச காலமல்ல மூன்று வருட முயற்சியில் தான் அது கனிந்து வந்தது.

அது மட்டுமன்றி நிருபரை மிகவும் அற்பதனமாக நினைத்து அனல் வீசும் வகையிலேயே எடுத்தேன் கவிழ்த்தேன் எனும் பாணியில் தான் அந்தப்பேட்டி அமைந்திருந்தது.

ஆக..... ஊடகத்துறை என்றாலே கெடுபிடியுடன் செயற்படுவதாகத் தான் விருது கொடுக்கப் பட்டதோ......?

1992இல் அரசுக்குச் சொந்தமான டான்சி நிலத்தைத் தனது பதவியைப் பயன்படுத்தி அடிமாட்டு விலைக்கு தனது தோழி சசிகலாவுடன் வாங்கியிருந்தார்.

இது தொடர்பான வழக்கில் 1996இல் ஜெயலலிதாவிற்கு 3 ஆண்டு கடுங்காவல் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டிய அவலம் உருவாகி இருந்தது.

இதன்பின்னர் 2001இல் முதலமைச்சராகப் பதவி ஏற்றதை உச்ச நீதி மன்றம் செல்லாது என்று தடை விதித்ததால் முதலமைச்சர் பதவியை இழக்கக் நேரிட்டது.

இதனையடுத்து, சென்னை தனி நீதிமன்றம் டான்சி நில பேர ஊழலில் குழப்பம் இருப்பதாகக் கூறி ஜெயலலிதாவை விடுதலை செய்தது.

அதன் பின்னர் ஆண்டிபட்டி தொகுதி மூலம் ஜெயலலிதா முதலமைச்சராக ஆகிவிட்ட தென்னமோ உண்மைதான்.

ஆனால் கடந்த 2003 இறுதிக் காலப்பகுதியில் உச்ச நீதிமன்றம் டான்சி நிலத்தை ஜெயலலிதா திரும்பக் கொடுக்கவேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.

அத்துடன் உயர்பதவிகளில் வகிப்பவர்கள் நேர்மையுடையவர்களாக இருக்கவேண்டும் என்றும் எச்சரிக்கை செய்திருந்தது.

அப்படியெனில் ஜெயலலிதா முதலமைச்சர் கதிரையில் இருந்து கொண்டு நேர்மைக்கு மாறாக அரசுக்குச் சொந்தமான நிலத்தையே கொள்ளையிட்டு விட்ட தாகத் தானே உச்சநீதிமன்றம் மறைமுகமாக குற்றம் சுமத்தியுள்ளது.

எனவே சிறைத்தண்டனை அனுபவித்தமைக்காகவும் கூட விருது வழங்கப்பட்டு விட்டதோ எனும் சந்தேகமும் இருக்கின்றது.

இதே போன்று 1993இல் வருமானத்திற்கு அதிக மாகச் சொத்து சேர்த்துள்ள தாகத் தமிழக முதல மைச்சர் மீது வழக்கு நிலுவையில் இருக்கின் றது.

அது மட்டுமன்றி பெங்களூர் நீதிமன்றத்தில் இந்த வழக்கு இன்றோ......நாளையோ... விசாரணைக்குட்படுத்தப்படவும் இருக்கின்றது.

ஆனால் வழக்கு விசாரணைகளை முடக்குவது எப்படி.......? என்பதில் தான் ஜெயலலிதா தீவிரமாக ஆலோசித்து வருகின்றார். எனினும் வழக்கு அடுத்த மாநிலத்தில் நடைபெற இருப்பதனால் தீர்ப்பு பாதகமாகவே கூட அமைய முடியும்.

எனவே மக்களுக்காக சேவையாற்றுவதாகக் கூறிக்கொண்டு மக்களையே சுரண்டித் தனக்கு சொத்துச் சேர்த்தமைக்காகத்தான் இந்த விருதை ஜெயலலிதா பெற்றுள்ளாரா.....?

தமிழக மக்களின் முக்கியமான பிரச்சினைகளிலொன்று விவசாயத்திற்கான தண்ணீர்ப் பற்றாக்குறை. வருடாவருடம் கர்நாடக அரசு ஏதோ சிறிதளவு தண்ணீரை மட்டுமாவது அணையிலிருந்து திறந்து விடுவது வழமை.

ஆனால் வீரப்பன் கர்நாடக எல்லையில் இருப்பதாகவும் கர்நாடக அரசுஆதரிப்பதாகவும் மறைமுகமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்.

அத்துடன் கர்நாடகத்தவரான இந்து பத்திரிகையாசிரியர் ராமை கர்நாடகத்திலேயே கைது செய்யத் தமிழகப் பொலிசாரை அனுப்பி கர்நாடக மாநிலத்துடன் மேலும் மேலும் பகையை வளர்த்துக் கொண்டார்.

இதனால் கர்நாடக அரசு காவிரியைத் திறந்துவிட மறுத்து விட்டது. மக்களுக்காகச் சேவை செய்யும் எந்த முதலமைச்சரும் தனிப்பட்ட பகையுணர்வைப் பாராட்டாது விட்டுக் கொடுத்து சமரச முயற்சிக்கே முற்படுவர்.


ஆனால் தனது சுயகௌரவம் பாதித்துவிடும் எனும் காரணமாக கர்நாடக அரசுடன் சமரசம் செய்யும் இணக்கமான போக்கை கடைப்பிடிக்கவோ ஜெயலலிதா ஒருபோதும் முற்பட்டதில்லை.

கோயில்களில் பாதணிகள் பராமரிப்பிற்குக் கட்டணம்; வைத்தியசாலைகளில் நோயாளர் களைப் பார்வையிடுவதற்குக் கட்டணம்; பாடசாலை மதிய சத்துணவுத் திட்டத்தில் முட்டை நீக்கம், போக்குவரத்துக் கட்டண உயர்வு, கோயில்களில் பலியிடத்தடை, மதமாற்றத் தடைச்சட்டம், கட்டாய நிலத்தடி நீர்சேமிப்பு...... இவ்வாறு தமிழக மக்களுக்கு எடுத்ததற்கெல்லாம் சட்டம் போட்டு அவர்களை மூச்சுத் திணறடித்தமைக்கோ விருது.....?

இந்திய அரசின் தணிக்கைத் துறையை கட்டுப்பாட்டில் வரும் மாநிலக் கணக்காளர் தீத்தன் வெளியிட்ட தகவல் எவரையும் அதிர்ச்சிக்குட்படுத்தத் தவறவில்லை.

தமிழக அரசின் தவறான நிர்வாகத்தினால் கடந்த 3ஆண்டுகளிலும் 17000கோடி ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டிருப்பதாகப் பகிரங்கமாகத் தகவல் வெளியிட்டிருந்தார்.

ஜெய(ம்)லட்சுமி







இதேவேளை இந்தியா ருடே பத்திரிகை வருடாவருடம் நடத்தும் சிறந்த மாநில முதலமைச்சர் யார்? எனும் மக்களின் மனநிலை அறியும் கருத்துக் கணிப்பில் தொடர்ந்து 3தடவையாகத் தமிழக முதலமைச்சர் கடைசியில்தான் இருந்து வருகிறார். மாநிலத்தின் வளர்ச்சியைச் சுக்குநூறாக்குவதற்காகத் தான் இந்த விருதா....?

அல்லது தமிழக முதலமைச்சர் வாஸ்து சாஸ்திரத்தில் மூழ்கிப் போய் நாளாந்தம் தனது இருப்பிடத்தையும், அலுவலகத்தையும் மாற்றுவருவதற்காகத்தான் விருதோ....?

மொத்தத்தில் தமிழக மக்களின் வெறுப்பிற்கு உள்ளாகியிருப்பதற்காகத்தான் விருதோ...?

ஆக......தமிழக முதலமைச்சருக்கு ஏன்....எதற்கு..எப்படி..விருது கிடைத்துள்ளது........? எனும் வினாவிற்குப் பதிலளிப்பவர்தான் யார்?

அ.கலைவாணி

# சமாதானத்திற்காகச் சந்திரிகா எதையுமே நிறுத்தவில்லை!

விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசிற்கும் இடையிலான யுத்த நிறுத்தம் இரண்டரை ஆண்டுகளைக் கடந்து நீடித்து வருகின்ற போதும், சமாதானப் பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட முட்டுக்கட்டை நீடித்த வண்ணமே உள்ளது. அரசாங்கத் தரப்பு பேச்சுவார்த்தை தொடர்பான உறுதி யான நிலைப்பாட்டை மேற்கொள்ளாமையே இதற்குக் காரணம் என்பது வெளிப்படை யானதொன்று.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங் கம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராகவே உள்ளது எனக்கூறினும் ஐக்கிய மக்கள்சுதந்திர முன்னணி அரசாங்கத்திலுள்ள அனைவருமே ஒரேகுரலில் சமாதானத்திற்கு ஆதரவாகப் பேசுவதாக இல்லை. இதன் விளைவே பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே கட்சியினர் சமாதானத்திற்கு எதிரானவர்கள். ஆளும் கூட்டணிக்குள்ளேயே உள்ளனர், வெளியில் அல்ல எனக் கூறுகின்றனர்.

இதே சமயம் சனாதிபதி சந்திரிகா குமார துங்க கூட சமாதானம் குறித்து உளப்பூர்வ மான ஈடுபாட்டையும், செயற்பாட்டையும் கொண்டவராக இல்லை. ஒரு வகையில் பார்த்தால் பேச்சளவில் மட்டுமே சனாதிபதி சந்திரிகாவின் ஈடுபாடு உள்ளமை தெரிய வரும். அவ்வாறு இல்லாது விடில் சனாதிபதி சந்திரிகா அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தற்பொழுது விடுதலைப்புலிகளுக்கு மாறான தாக, முரண்பாடானதாக இருக்க முடியாது.

யுத்த நிறுத்தம் இரண்டரை ஆண்டுகளை யும் தாண்டி நீடித்து வருகின்றதென்பது உண்மையே. ஆனால் இவ் யுத்த நிறுத்தமானதுசிறிலங்கா ஆயுதப்படையினரின் தேவை கருதியதாகவே நடைமுறையில் உள்ளது. வேறுவிதமாகக் கூறுவதானால் தம்மைப் பலப்படுத்திக் கொள்வதற்கான கால இடைவெளிகளாகவே யுத்த நிறுத் தத்தைச் சிறிலங்கா ஆயுதப்படையினர் கடைப்பிடித்து வருகின்றனரே ஒழிய சமாதானத்தின் மீதான பற்றுறுதி காரணமாக அவர்கள் யுத்தநிறுத்தத்தைக் கடைப்பிடிப்ப தாக இல்லை.

அத்தோடு சிறிலங்கா ஆயுதப்படைத் தரப்போ அரசாங்கத் தரப்போ யுத்த நிறுத்தத் திலும், சமாதானப் பேச்சுவார்த்தையிலும் நம்பிக்கை கொண்டிருப்பின் அவர்கள் பெரு மளவு இராணுவத் தளபாடக் கொள்வனவில் அக்கறையும், பிராந்திய சர்வதேச வல்லரசு களுடனான பாதுகாப்பு உடன்பாட்டிலும் தீவிர கவனம் செலுத்தமாட்டார்கள். சர்வதேச ரீதியிலான இராணுவ ஆலோசனை பெறு வதில் அக்கறை கொண்டிருக்கமாட்டார் கள்.

ஆனால், சிறிலங்கா ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் அவ்வாறானதாக இல்லை. மாறாக, விடுதலைப்புலிகளுடன் யுத்த நிறுத்தத்தைக் கடைப்பிடிக்கும் சிங்கள ஆட்சியாளர்கள் யுத்தத்தை நிறுத்திக் கொண் டதுபோல் தமிழ் மக்களுக்கோ அன்றி விடுதலைப்புலிகளுக்கு எதிரான செயற்பாடு கள் எதனையுமே நிறுத்திக் கொள்ள இல்லை. இவர்கள் உளரீதியாக சமாதானம் தொடர்பான ஆர்வம், அக்கறை கொண்டவர் களாகவும் இல்லை.

இதனை சனாதிபதி சந்திரிகா தலைமை யிலான ஐ.ம.சு.முன்னணி அரசாங்கமானது, அரசியல், இராஜதந்திர இராணுவ ரீதியில் விடுதலைப்புலிகளுக்கும், தமிழ் மக்களுக் கும் எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் எதையும் குறைத்துக் கொள்ளாததில் இருந்தே புரிந்து கொள்ள முடியும்.

பொ.ஐ.முன்னணி அரசாங்கம் புலி களுக்கு எதிராகப் பாரிய யுத்தம் ஒன்றை நடத்திய வேளை சர்வதேச ரீதியில் விடு தலைப்புலிகளுக்கு எதிரான பெரும் எடுப் பிலான பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டன. இப்பிரச்சார நடவடிவக்கைகள் யுத்தத்தின் ஓர் அங்கம் போன்றதாயிருந்தது. இப்பிரச் சாரங்கள் வெளிநாடுகளில் உள்ள சிறிலங்கா தூதரகங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. இதனை முன்னின்று வழி நடத்தியவர் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஆவார்.

இவரே தற்பொழுதும் சிறிலங்கா வெளி விவகார அமைச்சராகவுள்ளார். அவர் தற் பொழுதும் தனது நிலைப்பாட்டில் இருந்து பெரும் மாற்றம் கொண்டவராக இல்லை. அண்மைக் காலத்தில் இரகசியமாக வெளி நாட்டுப் பயணங்களை மேற்கொள்ளும் இவர் விடுதலைப்புலிகளுக்கு எதிரான பிரச்சாரத்தைக் கைவிடுவதாக இல்லை.

அதாவது, வெளிநாடுகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக பிரச்சாரம், புலிகளுக்கு எதிரான செயல்களுக்கு ஆதரவு கோருதல் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சினால் கைவிடப்பட்டதாக இல்லை. தொடர்ந்தும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான பிரச் சாரத்தை அவர்கள் மேற்கொண்டே வரு கின்றனர். அண்மையில், ஐரோப்பிய நாடு களுக்கு விஜயம் செய்த சனாதிபதி சந்தி ரிகாகூட விடுதலைப்புலிகளுக்கு எதிரான கருத்துக்களைத் தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்தமை சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

இதேபோன்று, இராஜதந்திர மட்டத்திலும் விடுதலைப்புலிகளுக்கு எதிரான செயற்பாடு களில் ஐ.ம.சு. முன்னணி அரசாங்கம் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது. குறிப் பாக, சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு விடுதலைப்புலிகளே முட்டுக்கட்டைகளைப் போடுவதாகவும், கிழக்கில் உருவாகியுள்ள பதற்ற நிலைக்கு விடுதலைப்புலிகளே காரணம் எனவும், வெளிநாடுகளை நம்பச் செய்வதற்கான இராஜதந்திரச் செயற்பாடு களுடன் சிறிலங்கா அரச தரப்பு காய்களை நகர்த்தி வருகின்றது.

இவை தவிர, யுத்த காலத்தில் எவ்வாறு தமிழ் தேசவிரோத சக்திகளைத் தமது தேவைக்கு அரசியல், இராணுவ ரீதியில் பயன்படுத்தியதோ அதேபோன்று, தற்பொழு தும் அதே அணுகுமுறையில் செயற்படுவ தாகவே உள்ளது. எடுத்துக் காட்டாக விடு தலைப்புலிகள் அமைப்பில் இருந்து வெளி யேற்றப்பட்ட கருணாவைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளுக்கு எதிரான தாக்குதல் நடவடிக்கைகளை அது முனைப்புப்படுத்த முனைந்தது.

இதற்கென கருணாவிற்கும், அவரது சாகாக்களுக்கும் பாதுகாப்பும், ஏனைய வசதி களும் செய்து கொடுத்ததோடு, இராணுவப் புலனாய்வுத்துறையுடன் இணைந்து செயற் படும் வகையில் ஏற்பாடுகளையும் மேற் கொண்டது. ஆனால், கருணா தரப்பிடம் இருந்து இராணுவ ரீதியில் எதிர்பார்த்த அளவிற்கு அரசாங்கத்திற்குப் பயன் கிட்ட வில்லை என்றே கூறலாம்.

அதிலும், கருணாவின் சகாக்கள் எட்டுப் பேர் 'கொட்டாவ' என்னும் இடத்தில் கொல்லப்பட்டமையும், கருணாவின் தேச விரோதக் குழுவிற்கு தாக்குதல் நடவடிக்கை களுக்கு தலைமை தாங்கி நடத்திய கருணா வின் சகோதரன் ரெஜி விடுதலைப்புலிகளின் தாக்குதலில் கொல்லப்பட்டமையும் இராணுவ ரீதியில் கருணாவின் குழு முடக் கத்திற்கு உள்ளாக வேண்டிய நிலை உரு வானது. இது சிறிலங்கா அரசு புலிகளுக்கு எதிராக எதிர்பார்த்த அளவில் செயற்பட முடியாததொரு நிலைகளையும் உரு வாக்கியது எனலாம்.

கருணாவின் உதவியுடன் கிழக்கிலங் கையை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட் டில் இருந்துவிடுவிப்பதன் மூலம் ஒருபுறம் தமிழர் தாயகம் என்ற கோட்பாட்டை வலு விழக்கச் செய்வதோடு, மறுபுறத்தில் விடு தலைப்புலிகளை இராணுவ ரீதியில் பல வீனம் அடையச் செய்வதே சந்திரிகா அரசின் நோக்கமாக இருந்தது.

ஆனால், எதிர்பார்க்கைக்கு மாறாக, விரைவாகவே கருணா மட்டக்களப்பில் இருந்து வெளியேற்றப்பட்டமையும், அவரது தேசவிரோதக்குழு இராணுவ ரீதியில் இழப்புக்களைச் சந்தித்தமையும் சந்திரிகா குமார துங்கவிற்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் கொடுத்தது.

இந்நிலையில், தற்பொழுது கருணாவை மையமாகக் கொண்டு தமிழர் தேசிய ஒரு மைப்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கும் முயற்சி யில் சிறிலங்கா அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. அதாவது, கருணாவை மையமாகக் கொண்டு அரசியற் கட்சி ஒன்றைப் பதிவு செய்வதன் மூலம் அரசியல் ரீதியில் பிள வினை உண்டுபண்ணலாம் என அது முற் பட்டு நிற்கின்றது.

கருணாவின் இம்முயற்சியைத் தாம் வரவேற்பதாகவும், கருணாவின் அரசியல் கட்சியை தேர்தல் ஆணையாளர் அங்கிகரிப் பார் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச் சர் மங்கள சமரவீர கூறுவது அரசாங்கம் இவ்விடயத்தில் ஆர்வம் கொண்டுள்ளதை வெளிப்படுத்துவதாகவே அறிவிப்புச் செய் வதாக இருந்தது.

இதேவேளை, கருணாவை மையமாகக் கொண்டு உருவாக்கப்படும் அரசியல் கட்சி யில் ஈ.என்.டி..எல்.எப். இணைந்துள்ள தாகவும், அதற்கு ஆதரவாகவுள்ளதாகவும் வெளியாகியுள்ள தகவலானது, கருணா வின் இச்செயற்பாட்டின் பின்னணியில், சிறிலங்காவிற்கு வெளியில் உள்ள சில சக்திகளும் உள்ளனவா என்ற சந்தேகத்தை யும் தோற்றுவிப்பதாகவுள்ளது. ஏனெனில், கருணாவிற்கு தற்பொழுது தோள்கொடுத்து வருபவர்கள் - அந்நிய சக்தியொன்றின் ஆதரவு சக்தியாக அடையாளம் காணப்பட்டு அவர்களின் ஆசீர்வாதத்துடன் செயற்படும் சக்தியாகவும் உள்ளவை ஆகும்.

அதாவது, தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் எதிரான சக்திகளை இராணுவ, அரசியல் ரீதியில் ஒருங்கிணைப்பதும், அவர்களின் செயற்பாட்டிற்கு ஆதரவு அளிப்பதும், அவர் களைச் செயற்பட வைப்பதிலும் ஆட்சியாளர் கள் கொண்டிருந்தஅக்கறை யுத்தநிறுத்தஉடன் பாட்டின் பின்னரும் குறைவடையவில்லை.

இதற்கு அடுத்ததாக, விடுதலைப்புலி களுக்கு எதிரான பிரச்சார நடவடிக்கைகளி லும், யுத்த காலத்தைப் போன்றே அரசாங் கத் தரப்பு செயற்படுவதாக உள்ளது. எடுத்துக்காட்டாக, விடுதலைப்புலிகள் மீது தேசவிரோதக் குழுக்கள் தாக்குதல்கள் நடத்தியதாக உண்மைக்குப் புறம்பான செய்திகளுக்கு சிறிலங்கா அரசு கொடுக்கும் முக்கியத்துவம் யுத்த காலத்தில் இராணுவத் தரப்பின் செய்திகளுக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்திற்கு எந்த வகையிலும் குறைவில்லாததாகவே உள்ளது.

இவற்றிற்கு எடுத்துக்காட்டாக, அண்மை யில், கிழக்கில் நடந்த சம்பவங்கள் சிலவற் றிற்கும், நடக்காத சம்பவங்கள் சிலவற்றிற் கும் சிறிலங்கா அரச தொடர்பு சாதனங்கள் கொடுத்த முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்ட முடியும்.

இவை ஒருபுறம் இருக்க, சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் தமிழ் மக்களை அரசியல் ரீதியில் பலவீனப்படுத் தும் நடவடிக்கைகளில் முனைப்புக்காட்டு வதைச் சுட்டிக்காட்ட முடியும். இந்த வகை யில் வாக்களிக்கத் தேசிய அடையாள அட்டை கட்டாயம் என்னும் சட்ட மூலமும், சனாதிபதி சந்திரிகா தீவிரமாகப் பரிசீலித்து வரும் தேர்தல் முறை மாற்றமும் - அதாவது, விகிதாசரத் தேர்தல் முறையில் மாற்றம் செய்ய மேற்கொள்ளப்படும் முயற்சியும் தமிழ் மக்களைத் திட்டமிட்ட ரீதியில் பலவீனப்படுத்தும் செயலே ஆகும்.



அதாவது, வாக்களிக்க அடையாள அட்டை கட்டாயமாக்கப்படதன் மூலம் தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண் ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படவுள்ள அதேவேளை, விகிதாசாரத் தேர்தல் முறை மாற்றமானது ஆட்சியைத் தீர்மானிப்பதில் சிறுபான்மைக் கட்சிகள் வகிக்கும் முக்கியத்துவத்தைக் குறைவடையச் செய்யமுள்ளது.

இந்த வகையில், யுத்தத்தினைத் தவிர தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத் திற்கும், விடுதலைப்புலிகளுக்கும் எதிரான செயற்பாடுகளில் ஆட்சியாளர்கள் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கையில் இவர் களுடன் சமாதானம் பேசுவதும், இணக்கப் பாடு காண்பதென்பதும் எத்தனை தூரம் சாத்தியப்பாடானதாக இருக்கும்.

சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வொன்று காணப்படுதல் வேண்டுமானால், அதில் உளப்பூர்வமான நம்பிக்கை வைத்தல் வேண்டும். சமாதான முயற்சிகள் கைகூடுவதற்கு இசைவான வாய்ப்புக்கள் உருவாக்குதல் வேண்டும். இதைவிடுத்து, சமாதானம் பற்றி வாய் பேசிக் கொண் டிருக்கையில் தமிழ் மக்களுக்கும், புலி களுக்கும் எதிரான செயல்கள் பற்றிச் சிந் திக்குமேயானால், சமாதானம் எவ்வாறு கைகூடும்?

ஜெயராஜ்

## வாகனக் கடத்தலுடன் தொடர்புடைய சிப்பாய் மீது கொலைக் குற்றச்சாட்டு!

### தடயப் பொருட்களும் மீட்பு

(செட்டிகுளம்)

வாகன கடத்தலுடன் தொடர்பு டையவர் என்ற சந்தேகத்தில் கண்டி "வத்தேகம" பொலிசாரால் கைது செய்யப்பட்ட இராணுவ சிப்பாய் கொலை ஒன்றுடனும் தொடர் புடையவர் என்று தெரிவிக்கப்படு கின்றது.

இவர் மன்னார் உயிலங்குளம் இராணுவ முகாமில் கடமையாற் றிய போது அனுராதபுரம் பகுதி யில் வாகனம் ஒன்றினை கடத்தி இராணுவ முகாமிற்குள் வைத்து அந்த சாரதியை கண்டதுண்டமாக வெட்டி பெற்றோல் ஊற்றி எரித்து பின்னர் எச்சங்களைஅவர் தங்கி யிருந்த அறையில் கிடங்கிற்குள் வெட்டிப் புதைத்ததாகத் தெரிவிக் கப்படுகின்றது.

நேற்று முன்தினம் உயிலங் குளம் முகாமில் பல எச்சப் பொருட்களை பொலிசார் மீட்டுள் ளனர். கொலை செய்தமையுடன் தொடர்புடைய தடையப் பொரு ளும் எலும்பு எச்சங்களும் மீட்கப் பட்டுள்ளது. மீட்கப்பட்ட எலும்பு எச்சங்கள் இரசாயனப்பகுப்பாய் வுக்காக கண்டிக்கு அனுப்ப மன்னார் நீதவான் பொலிசாருக்கு உத்தரவிட்டுள்ளார். (21)

## இறக்குமதி செய்யப்பட்ட அரிசி பகிர்ந்தளிப்பு

(கொழும்பு)

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள 2500 மெற்றிக் தொன் அரிசியை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகள் நடைபெற்று வருவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

நாடு முழுவதும் உள்ள கூட்டுறவுச்சங்கங்களிற்கு இந்த அரிசி நேற் றும், நேற்றுமுன்தினமும் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதற்கமைய நுகர் வோருக்கு ஒருகிலோ சம்பா அரிசியை 34 ரூபாவிற்கும், ஒரு கிலோ பச்சை அரிசியை 28 ரூபாவிற்கும், ஒரு கிலோ பாஸ்மதி 43 ரூபாவிற்கும் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் எதிர்காலத்தில் மேலும் 25000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய சிறிலங்கா அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தியமைக்க சர்வசன வாக்கெடுப்புக்கு சனாதிபதி திட்டம்

## -வருட இறுதியில் நடைபெறலாம்

(கொழும்பு)

**அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தியமைப்பதற்கு சனாதிபதி பொதுமக்களின் ஆணையைக் கோரவுள்ளதாகவும் இது தொடர்பாக எதிர்வரும் டிசம்பர் அல்லது சனவரி மாதமளவில் சர்வசன வாக்கெடுப்பொன்றை நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சரவை வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி உட்பட அனைத்து அரசியல் கட்சிகளும் சர்வசன வாக்கெடுப்பு மூலம் அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தியமைக்க ஆதரவு வழங்க முன் வந்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை திருத்தியமைத்து நிறைவேற்று அதிகாரங்களைப் பாராளுமன்றத்துக்கு வழங்குதல், சிறுபான்மை மக்களின் பிரதிநிதித்துவத்தை பாதிக்காத வகையில் விகிதாசார தேர்தல் முறையை மாற்றியமைத்தல் போன்ற விடயங்களை அடிப்படையாகக் கொண்டே தற்போது நடைமுறையிலுள்ள அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றியமைக்க சனாதிபதி திட்டமிட்டிருப்பதாகவும், இதன் பொருட்டே மக்களின் ஆணையைப் பெற சனாதிபதி சர்வசன வாக்கெடுப்பை நடத்தவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

கடந்த பொதுத் தேர்தலின் போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி பீடத்தை கைப்பற்றினால் அரசியலமைப்புச் சட்டம் திருத்தியமைக்கப்படும் என வாக்குறுதியளித்திருந்தது. எனினும் சட்டத்தை திருத்தியமைக்கக் கூடிய வகையில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதன் காரணமாகவே மக்களின் ஆணையைப் பெறும் பொருட்டு சர்வசன வாக்கெடுப்பை நடத்த திட்டமிட்டிருப்பதாகவும் மேலும் அமைச்சரவை வட்டாரங்களி லிருந்து தெரிய வருகின்றது.

மேலும் கடந்த அரசாங்க காலத்தில் மக்கள் ஐக்கிய முன்னணி தலைவர் தினேஸ் குணவர்த்தன தலைமையில் செயற்பட்ட பாராளுமன்ற தெரிவுக்குழு விருப்பு வாக்கு முறையினால் வன் செயல்கள் அதிகரிக்கின்றன. ஆகையால் தேர்தல் முறையை மாற்றியமைக்க வேண்டுமென சிபார்சு செய்திருந்தது. அதன் அடிப்படையிலேயே அரசியலமைப்புச் சட்டம் திருத்தியமைக்கப்படவுள்ளது எனவும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன.

# சமாதானத்தை மீண்டும் குழப்ப சனாதிபதி சந்திரிகா முயற்சி

## வாசுதேவ நாணயக்கார குற்றச்சாட்டு

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்காமல் சனாதிபதி சந்திரிகா தேசிய சமாதான சபையை அமைத்துப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்து நாட்டில் சமாதானத்தை மீண்டும் குழப்பியடிப்பதற்கு முயற்சி செய்கிறார் என ஐக்கிய இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

வெகுவிரைவில் இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாகப்பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு சனாதிபதிக்கு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## கொழும்பில் அதிகரித்து வரும்

# குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்த விசேட அதிரடிப்படை உதவி கோரல்

(கொழும்பு)

கொழும்பில் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட அதிரடிப்படையினரின் உதவி நாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சிறிலங்காவின் சட்டம், ஒழுங்கு மற்றும் பொதுப்பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா, பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்னாண்டோ மற்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள் கலந்துகொண்ட மாநாடொன்றிலேயே இத்தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி கொழும்பு வடக்கு, தெற்கு, மத்தி என மூன்று வலயங்களாகப் பிரிக்கப்பட்டு, விசேட அதிரடிப்படையினரால் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும், ரோந்து நடவடிக்கைகள் திடீர் சுற்றிவளைப்புகள், தேடுதல் நடவடிக்கைகள் மற்றும் தற்காலிக வீதித் தடைகள் என்பன விசேட அதிரடிப்படையினரால் நடைமுறைப்படுத்தப்படும் எனவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்ததாக "டெய்லி மிரர்" செய்தி வெளியிட்டுள்ளது.

# சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை விரைவில் தனியார் மயப்படுத்த முயற்சி

## -ஜே.வி.பி.சார்பு தொழிற்சங்கம் கண்டனம்

(கொழும்பு)

சிறிலங்கா பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தும் தீவிர முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதாக கூட்டுத்தாபனத்தின் ஜே.வி.பி.சார்பு தொழிற்சங்கங்கள் குற்றம் சுமத்துகின்றன.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு சுதந்திரக்கட்சியின் தொழிற்சங்கங்கள் ஆதரவுடன் செயற்படுவதாகவும் சுதந்திரக்கட்சித் தலைமையகத்தின் பணிப்புரைகளின்படி கூட்டுத்தாபனத்தை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கையில் சு.க.சார்பு தொழிற்சங்கங்கள் படிப்படியாக ஈடுபட்டு வருவதாகவும் கூட்டுத்தாபன ஜே.வி.பி தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கவலை தெரிவித்தனர்.

கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குவதாக அரசாங்கம் திட்டமிட்டு மும்முரமான பிரசாரங்களில் ஈடுபட்டுவருவதாகவும் தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

இதேவேளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தை இந்தியபாரத் நிறுவனம் பொறுப்பேற்க ஏற்பாடாகியிருந்த போதிலும் கடந்த வாரம் அந்த முயற்சியை பாரத் நிறுவனம் கைவிட்டுள்ளதாகத் தொழிற்சங்கப் பேச்சாளர் ஒருவர் ஊடகம் ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

இதனால் புதிய இந்திய நிறுவனத்திடம் கூட்டுத்தாபனத்தை ஒப்படைப்பது தொடர்பான பேரம் பேசல்கள் தற்போது இடம்பெற்று வருவதாகவும் இந்தப் பேச்சுக்களில் சு.க.சார்பு தொழிற்சங்கங்கள் பங்குபற்றி வருவதாகவும் ஜே.வி.பி தொழிற்சங்கங்கள் தெரிவித்தன.

# தங்க முலாம் பூசிய முருகனின் கண்களைத் திருடியோர் கைது!

(கொழும்பு)

கதிர்காம ஆலயத்தில் உள்ள மூலஸ்தானத்தின் முருகன் சிலையின் தங்க முலாம் பூசிய இரண்டு கண்களையும், காணிக்கைப் பெட்டியையும் திருடிய நபர்கள் இருவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

இவர்களைக் கைது செய்த திஸ்ஸமாராம பொலிசார் வெலிமட நீதவான் முன் ஆஜர் செய்தனர்.இருவரையும் இம்மாதம் 18 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைத்திருக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# வீதி அபிவிருத்தியின் மூலமாக அரசு கிராமிய பொருளாதாரத்தைத் தரம் உயர்த்தும்!

## -சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

வீதி அபிவிருத்தியூடாக கிராமிய பொருளாதாரத்தைத் தரம் உயர்த்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக பிரதமர் மகிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார். கேகாலையில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தடைகள் இருந்த போதிலும் முக்கிய அபிவிருத்தித் திட்டங்களை அரசாங்கம் மேற்கொள்ளும் என அவர் கூறியுள்ளார்.

அரசாங்கத்தின் முற்போக்குக் கொள்கைக்காக மக்களின் ஆதரவை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என்று இவ்வைபவத்தில் கலந்துகொண்ட பிரதியமைச்சர் ரஞ்சித் சியம்பலப்பிட்டிய சுட்டிக் காட்டினார்.

# உரம் உற்பத்திக்கான மானியத்தை மட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

உரவகைகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானியத்தை கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் உடன் தீர்மானம் எடுத்துள்ளது.

அதன் படி உரம் உற்பத்தி செய்யும் நிறுவனம் ஒக்ரோபர் 2ஆம் திகதி தொடக்கம் டிசம்பர் 31ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் 10,000 மெட்ரிக் தொன் உரத்திற்கு மட்டும் இந்த மானியம் வழங்கல் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் தீர்மானத்தை கால்நடை வளர்ப்பு நீர்ப்பாசன அமைச்சின் செயலாளர் திஸ்ஸவர்ண குலசூரிய பதிவு செய்யப்பட்டுள்ள உரம் உற்பத்தியாளர்களுக்கு அறிவித்துள்ளார்.


# VACANCIES

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

University of jaffna will entertain applications from suitably qualified persons for the undermentioned posts.

*Faculty of Medicine*

1.**professor** in anatomy/community Medicine /pathology/ forensicMedicine/Medicine/pharmacology/obsterics&gynaecology/ paediatrics/surgery.

2.**Senior Lecturer Grade I/Senior Lecturer Grade 11/Lecturer (probationary)** in Anatomy/Biochemistry/physiology/ CommunityMedicine/Pathology/ Parasitology/Forensic Medicine/ Pharmacology/ Psychiatry/Paediatrics/Obstetri csand Gynaecology/Medical Education.

3.**Chair** in Oncology/Orthopedics

4.**Clinical psychologist**

*Faculty of Engineering*

**Professor/Associate Professor/Senior Lecturer Gr.I** in civil Engineering

**Faculty of Arts**

**Senior Lecturer Gr.II/ Lecturer(probationary)**in Dance (Bharathanatiyam)/music (Vocal/Violin/Miruthangam)
**Instructor Gr.II** in Dance (Miruthangam/Vocal).

**Department of siddha Medicine**

**Senior Lecturer Gr.I/senior Lecturer Gr.II/ Lecturer(probationary)**in siddha Medicine.

**Faculty of applied science-Vavuniya Campus**

**Senior Lecturer Gr.I/Senior Lecturer Gr.II Lecturer (probationary)** in Biological science.

| POST | SALARY SCALE |
|---|---|
| Professor | Rs.28,050-8x605-32,890/-p.m |
| Associate Professor | Rs.25,355-8x605-30,195/-p.m |
| Senior Lecturer Grade I | Rs23,650-8x525-27,850/-p.m |
| senior Lecturer Grade II | Rs.20,160-5x525-22,785/-p.m |
| Lecturer(probationary) | Rs.13,070-1x375;9x415-17,180/-p.m |
| clinical Psychologist | Rs.13,070-1x375;9x415-17,180/-p.m |

**Note**: InAddition to the above an academic allowance of 30%of the salary and other allowances approved by the University Grants commission will also be paid.

*Statutory Benefits*

i) sabbatical leave entitlement for the holder of the post of senior Lecturer Gr.II and above.
ii) membership in universities provident Fund and pension Scheme in the university system.
iii) Gratuity payments
iv) Employees Trust Fund benefits.
v ) Free Medical Services

Closing date of applications for professors will be31.12.2004 and others will be 30.11.2004 application forms and other details may be obtained from the office of the Assistant Registrar/Establishments, university of Jaffna ,srilanka,either in person or by post on a payment of Rs.20/- per form ,Those who wish to obtain application form by post are requested to send a money order/postal order drawn in favour of the "Bursar University of Jaffna" together with a self addressed stamped envelop 23x30 cm in size.

Applicants from the university System /Government Departments / Corporations and statutory Boards should channel their applications through the Head of respective Institutions .

applications received after the closing date will be rejected with out intimation.

**VICE-CHANCELLOR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRILANKA.**

(சி.10274)

# சிவகுரு வாணிபத்தினரின் நவீன உமாசாகி காட்சியறை

## நாளை நண்பகல் 12.30 மணியளவில் கோலாகலமான திறப்புவிழா

தென்கிழக்காசிய நாடுகளில் அதியுயர்ந்த உலோக பலம், சக்தி வாய்ந்த உமாசாகி சீனாவின் உன்னத தயாரிப்பாகும். இதனை நேரடியாக சென்.அன்ரனீஸ் நிறுவனத்தார் சிவகுரு உந்துருளி வாணிபத்தினருக்கு பிரத்தியேகமாக இறக்குமதி செய்துள்ளார்கள். இதற்கு ஒரு வருட உத்தரவாதமும் அதி திறமையான உதிரிப்பாகங்களும் சிவகுரு வாணிபத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**18-10-2004 கொள்வனவு செய்யும் உந்துருளிகளுக்கு கொழும்பு விலையில் விசேட கழிவு**

**இலகு தவணைக்கட்டண முறையில் உமாசாகி உந்துருளி கொள்வனவு செய்யும் பொருட்டு St.Anthony's Consolidated Ltd நிறுவனத்தால் வங்கிக்கடன் வசதிகள் செய்து தரப்படும்.**

அனைவரையும் அன்புடன் அழைப்பதில் மகிழ்வடைகின்றோம்.


உங்களுக்கான தெரிவுகளுக்கு எமது குளிரூட்டப்பட்ட காட்சியறைக்கு வாருங்கள்

உமாசாகி உந்துருளிகளுக்கான வடபகுதி முகவராண்மை பெற்றவர்கள்

## சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்

Free Service WARRANTY 10,000km or 1 year

இல. 496,496/1, நாயகி கட்டடம், யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.




(சி-10491)



# கொல்சிம் சீமெந்து (புத்தளம் சீமெந்துக் கூட்டுத்தாபனம்)

# அறிமுகவிழாவும் சந்தைப்படுத்தல் கருத்தமர்வும்

*இடம் : பண்பாட்டு மண்டபம்,கிளிநொச்சி.*
*காலம் : 2004.10.18*
*நேரம் : மு.ப 11.00 மணி.*




### நிகழ்வுகள்

- சுடரேற்றல்
- அகவணக்கம்
- தலைமையுரை
- அறிமுகவுரை
  திரு.இரத்தினராஜா விஜயகுமார்
  (விற்பனை அதிகாரி) கொல்சிம் சீமெந்து
- சிறப்புரை
- முதன்மை விருந்தினர் உரை
  திரு.ஜெனில்ஸ் தயானந்தன்
  பொறியியலாளர் (கொல்சிம் சீமெந்துக் கூட்டுத்தாபனம்)
- நன்றியுரை

உருக்குலைந்த வாழ்வை மீட்க!! உறுதியான கட்டடங்கள் தேவை.
உறுதிமிகு கட்டடத்திற்கு வலுவுள்ள அத்திவாரம்

# கொல்சிம் சீமெந்து

இலங்கைத் தயாரிப்பில் உறுதிக்கு உரிமை கொண்டாடும்
ஒரே நிறுவனம்
கொல்சிம் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்


**விழாவில் கலந்து மகிழ்வில் திளைப்பீர்!**
**கருத்துக்கள் பெற்று கலக்கம் தீர்ப்பீர்!**

## உறுதியின் உண்மையை ஊரறிய வாருங்கள்

விழா ஏற்பாட்டாளர்கள்
வடபகுதியின் முகவராண்மையின் முன்னோடிகள்
பாண்டியன் வாணிபத்தினர்


(சி.10489)

# சென்னை கிரிக்கெட் டெஸ்ட்
# அவுஸ்திரேலியாவுக்கு சோதனை




அவுஸ்திரேலிய-இந்திய அணிகள் கலந்து கொள்ளும் 2ஆவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் நேற்று அவுஸ்திரேலியா இரண்டாவது இனிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 150 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று முன்தினம் 6 விக்கெட் இழப்பிற்கு 291 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்றுக் காலை தனது முதலாவது இனிங்சை தொடர்ந்த இந்திய அணி மதிய போசன இடைவேளைக்குச் சற்றுப் பின்னர் அனைத்து விக்கெடுக்களையும் இழந்து 376 ஓட்டங்களைப் பெற்றது. இதில் முகமட்கைவ் 64 ஓட்டங்களையும் பார்த்திவ் பட்டேல் 55 ஓட்டங்களையும் பெற்று அணிக்கு வலுச் சேர்த்தனர்.





சேன்வோர்ன் 6 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.



பின்னர் தனது இரண்டாவது இனிங்சைத் தொடர்ந்த அவுஸ்திரேலியா 4 விக்கெடுக்களை இழந்து 150 ஓட்டங்களைப் பெற்றது. அவுஸ்திரேலியாவின் முக்கிய வீரர்களான ஹெய்டன், லாங்கர், கில்கிறிஸ்ட் ஆகியோரின் விக்கெட்டுகளை அனில் கும்ளே வீழ்த்தினார். இப் போட்டியில் மொகமட் கைவ் இறுதி நேரத்தில் காயம் காரணமாக சற்றுத் தடுமாறினார். எனினும் தனது முதலாவது டெஸ்ட் அரைச் சதத்தை(64) பெற்றது குறிப்பிடத்தக்கது. இன்று போட்டியின் நான்காம் நாளாகும்.

## மொஸ்கோ டென்னிஸ்
## எலினா போவினா வெற்றி

மொஸ்கோவில் கிரம்ளின் கோப்பைக்கான டென்னிஸ் போட்டி நடந்து வருகின்றது இதில் நேற்று நடந்த போட்டியில் ரஷ்ய வீராங்கனை எலினா போவினா

6-3 6-2 என்ற நேர் செட்களில் அமெரிக்க வீனஸ் வில்லியம்சை வீழ்த்தினார்

## தெற்காசிய விளையாட்டுப் போட்டியில்
## கிரிக்கெட், வலைப்பந்தாட்டம்

அடுத்த வருடம் சிறிலங்காவில் நடைபெறவுள்ள தெற்காசிய நாடுகளின் மெய்வல்லுநர் போட்டிகளில் வலைப்பந்து, கிரிக்கெட் போன்ற போட்டிகளையும் இணைத்துக் கொள்ளத் தீர்மானித்திருப்பதாக தெரியவருகிறது.

ஆசிய வலைப்பந்தாட்ட சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்திருக்கிறது. அத்துடன் ஆசியாவின் கிரிக்கெட் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நான்கு நாடுகள் பங்கு கொள்ளும் கிரிக்கெட் போட்டிகளையும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாக சிறிலங்காவின் ஒலிம்பிக் சபை பேச்சாளர் கேமசிறி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தெற்காசிய மெய்வல்லுநர் போட்டிகளில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான், நேபாளம், பூட்டான், மாலைதீவு, சிறிலங்கா ஆகிய நாடுகள் பங்கு பற்றவுள்ளன.

## பாக்டெல் கிண்ணத்தை
## சிறிலங்கா அணி கைப்பற்றியது!



### பாகிஸ்தான் அதிர்ச்சித் தோல்வி



பாக்டெல் கிண்ணத்திற்கான இறுதிப் போட்டியில் பாகிஸ்தானை இலகுவாகத் தோற்கடித்து சிறிலங்கா அணி வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிச் சென்றது.

பாகிஸ்தான், சிறிலங்கா, சிம்பாப்வே அணிகள் கலந்து கொண்ட இம்முக்கோணத் தொடரில் நேற்று லாகூரில் நடந்த இறுதிப் போட்டியில் சிறிலங்கா அணி 119 ஓட்டங்களினால் பாகிஸ்தானைத் தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி 50 ஓவர்களில் 287 / 7 ஓட்டங்களைப் பெற்றது. இதில், அத்தபத்து 66 ஓட்டங்களையும், சங்கக்கார 68 ஓட்டங்களையும், ஜயவர்த்தன 49 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்பம் முதலே தடுமாறத் தொடங்கியது என்றே கூறலாம். பாகிஸ்தான் அணியில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் புட் மட்டுமே 48 ஓட்டங்களைப் பெற்றனர். பல முன்னணி ஆட்டக்காரர்கள் இரட்டை இலக்கத்தை எட்டாமலே களத்தைவிட்டு வெளியேறினர்.

இறுதியில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 168 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

இவ் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் வெற்றிபெறும் எனப் பல விமசர்கள் ஆருடம் கூறியிருந்தபோதும் பாகிஸ்தான் அணி இப்போட்டியில் தோல்வியைத் தழுவியது.

சிறிலங்காப் பந்து வீச்சாளர்களில், ஜெயசூரிய ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். உபுள் சந்தன மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இப்போட்டியின் சிறப்பாட்டக்காரர் விருதை சிறிலங்கா அணித் தலைவர் அத்தப்பத்து பெற்றார். இக் கிரிக்கெட் தொடரின் ஆட்ட நாயகன் விருதினை சொகைப் மலிக் பெற்றார்.

## 'ஊக்க மருந்து' பிரதிமா வழக்கு மத்திய அரசுக்கு நோட்டிஸ்

புதுடில்லி பிரதிமா குமாரியின் ரிட்மனுவை விசாரித்த டில்லி உயர் நீதிமன்றம் மத்திய அரசு இந்திய ஒலிம்பிக் சங்கத்துக்கு நோட்டிஸ் அனுப்ப உத்தரவிட்டது. சமீபத்தில் நடந்த எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் நமது பளுதூக்குதல் வீராங்கனைகளான பிரதிமா குமாரி, சனமாச்சா சானு ஊக்க மருந்துச் சோதனையில் சிக்கினர் இவர்கள் இருவரும் தடை செய்யப்பட்ட மருந்துப் பொருளை உட்கொண்டது தெரிய வரவே போட்டியில் இருந்து நீக்கப்பட்டனர். இது தொடர்பாக சிங்தேவ் தலைமையிலான கமிட்டி விசாரணை நடத்தியது. இக்குழு அளித்த அறிக்கையின் பேரில் பிரதிமா, சானு மற்றும் சுனைனா ஆகிய மூன்று வீராங்கனைகளுக்கும் இந்திய ஒலிம்பிக் சங்கம் வாழ்நாள் தடைவிதித்தது.

இதை எதிர்த்து பிரதிமா குமாரி சார்பில் டில்லி உயர் நீதிமன்றில் ரிட் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது. இதில் தடை விதிப்பதற்கான விதிமுறைகளை இந்திய ஒலிம்பிக் சங்கம் முறையாகப் பின்பற்றவில்லை என்று குற்றம்சாட்டப்பட்டிருந்தது. தனக்கு எதிராக பெரும் சதி நடந்துள்ளதாகவும் பிரதிமா மனுவில் கூறியிருந்தார் இதனால் உடல் மனதளவில் ஏற்பட்ட பாதிப்பை ஈடு செய்யும் வகையில் இழப்பீடாக ரூ.5கோடி வழங்க வேண்டும் என்றும் இவர் கோரி இருக்கிறார்.

## உள்ளரங்க உலகக் கிண்ணம்
## அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணிக்கு

சிறிலங்கா தலவித்து கொடவில் நடைபெற்ற உலக ஹச் கிண்ணத்துக்கான உள்ளரங்க கிரிக்கெட் தொடரை அவுஸ்திரேலியா கைப்பற்றியது. .உலகின் பிரபல அணிகள் பங்கு கொண்ட . இப் போட்டித் தொடரின் நேற்று, முன் தினம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் நியூசிலாந்து அணியை வென்ற சிறிலங்கா அணி இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது அவுஸ்திரேலியா தென் ஆபிரிக்க அணியை வென்று இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது இறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 70 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலளித்து ஆடிய சிறிலங்கா 48 ஓட்டங்களை மட்டும் பெற்று 22 ஓட்டங்களால் தோல்வியைச் சந்தித்தது

இப் போட்டித் தொடரில் இங்கிலாந்து,இந்தியா,பாகிஸ்தான் நியூசிலாந்து,தென்னாபிரிக்கா, சிறிலங்கா அவுஸ்திரேலிய அணிகள் பங்குகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## சிறிலங்கா வீரர்கள் மதுபோதையில்?
## நிரூபிக்கப்பட்டால் ஆயுட் தடை

கடந்த மாதம் இங்கிலாந்தில் நடைபெற்ற ஐ.சி.சி மினி உலகக் கிண்ண ஒருநாள் கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்து சிறிலாங்கா ஆணிகள் பங்குபற்றிய போட்டியின் முதல் நாள் இரவு சிறிலங்கா வீரர்கள் இருவர் மது போதையில் இருந்ததாகக் கூறப்பட்டதையடுத்து அவர்கள் மீது விசாரணைநடத்த சிறிலங்கா கிரிக்கெட் சபை தீர்மனித்துள்ளது. விசாரணையின் போது குற்றம் நிரூபிக்கப்பட்டால் இருவரும் அல்லது ஒருவர்ஆயுட் காலத் தண்டனைக்கு உள்ள ாக நேரிடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

அணியின் துவக்க ஆட்டக்காரரான அவிஸ்க குணவர்த்தன, சுழற்பந்து வீச்சாளர் கௌசால் லொக்கு ஆராச்சி ஆகிய இருவருமே மேற்படி குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்களிருவரும் உணவு விடுதியொன்றில் மது போதையில் இருந்த நிலையில் சக வீரர்களால் அறைக்கு அழைத்து வரப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் சிறிலங்கா கிரிக்கெட் சபையின் நிறைவேற்றதிகாரி துவிப்மெண்டிஸ். அணித்தலைவரையும்

பயிற்று விப்பாளரையும் வினாவிய போது இவ்வாறான சம்பவம் நடந்தமை பற்றி தமக்கு தெரியாது எனக் கூறியுள்ளனர்.

எனினும் இங்கிலாந்தில் வெளியாகும் பத்திரிகை செய்திகளும், இணையத்தள செய்திகளும் ஈ மெயில் செய்திகளும் சம்பவம் பற்றித் தெரிவித்துள்ளதால் இது தொடர்பாக விசாரணை நடத்தப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

## கிரெம்ளின் கிண்ணத்துக்கான டெனிஸ்
## அமெரிக்க வீராங்கனை முதலிடத்தில்

மொஸ்கோவில் 2.3 மில்லியன் பெறுமதியான "கிரெம்ளின் கிண்ணத்துக்காக நடைபெற்ற பெண்களுக்கான டெனிஸ் போட்டியில் இரண்டாவது சுற்றில் அமெரிக்கக வீராங்கனை லிண்ட்சே டெவான் போர்ட் ரஷ்யாவின் டினாரா சப்பினாவை 6-4, 6-2 என்ற செட் கணக்கில் வென்றுள்ளார்.

இவர் அமலி மௌரஸ்மோவை விட 15 புள்ளிகள் பின் தங்கிய நிலையில் இருந்தார். பின்னர் சப்பினாவை வென்று தற்போது முதலாமிடத்தில் உள்ளார்.இந்தப் போட்டியில் வென்றால் முதலாமிடத்தைப் பிடிக்கலாம் என்று ஒருவர் கூறியது போல துரதிஷ்டவசமாக மௌரிஸ் மோனாவினால் ஆட முடியாமல் விட்தாக டெவன் போர்ட் தெரிவித்துள்ளார்.

ஆரம்பப் போட்டிகளில் 18 வயதான அவரது எதிரணி வீராங்கனை அவரை வீழ்த்தினாராயினும், 1-0 என்ற கணக்கில் 48 நிமிடங்களில் வென்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த வெற்றி தனக்கு ஆச்சரியமளித்தாலும் இறுதிப் போட்டியில் வெல்ல முடியாது போனால் இது திருப்தியளிக்காது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கிரான் ஸ்லாம் தொடரில் இரு முறை வென்ற டெமான்டிவா குறோசியாவின் சாந்தா அமமிக்கை 6-3,6-3 என்ற கணக்கில் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார். இத்தொடரின் நடப்பு சம்பியனான அனஸ்டசியா மைஸ்கினாயெலினா லிக்கோவ்ட்சிவாவை 2-6, 6-1,6-0 என்ற கணக்கில் வென்றுள்ளார்.

வீனஸ் வில்லியம்ஸ் ரஷ்யாவின் விரா டச்சிவினாவை 20 நிமிடங்களில் வென்றுள்ளார். எனினும் காலிறுதியில் இடம் பிடிக்க யெலினாபோவினாவை 36 நிமிடங்களில் போராடி வென்றார்.




### ஹொங்கொங் பயணம்

ஆறு பேர் பங்கு கொள்ளும் போட்டி ஒன்றில் பங்கு கொள்ளும் முகமாக சிறிலங்கா அணியின் ஏழு பேர் கொண்ட குழு ஜெகன் முபாரக் தலைமையில் ஹொங்கொங் செல்லவுள்ளது.

போட்டிகள் எதிர்வரும் நவம்பர் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெறும்.


அணியில் இடம் பெறுவோர்:-

ஜெகன் முபாரக்(தலைவர்), ஹசந்த பெர்னாண்டோ, கயாள விஜகோன், தில்ஹார லொக்கு கெட்டிகே, ரஷான் பிறிஸ், ரங்க டயஸ், தில்ருவன் பெரேரா ஆகியோராவர்.

## 2007 றக்பி கிண்ணம் தனக்கே
## ஆஸி. அணித்தலைவரின் நம்பிக்கை

2007 ஆம் ஆண்டு பிரான்சில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண றக்பி போட்டிகளில் தனது திறமையை வெளிக்காட்டவிருப்பதாக அவுஸ்திரேலிய றக்பி அணித்தலைவர் ஜோர்ஜ் கிரகன் தெரிவித்துள்ளார்.

114 பந்தயங்களில் வென்று இங்கிலாந்து வீரர் ஜேசன்லேனாட் படைத்த சாதனையை முறியடிக்க அவருக்கு இன்னும் 12 வெற்றிகளைப் பெற வேண்டும். தற்போது அவர் உள்ளூர்ப் போட்டிகளில் சிறப்பாக ஆடி வருவதாகவும் வல்லபாய் அணியில் அவர் 3 வருடத் துக்கு ஒப்பந்தம் செய்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.



## சிந்தனைக்கு

சுதந்திரம் என்பது பேரம் பேசிப் பெற்றுக் கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல; அது இரத்தம் சிந்தி வெற்றி கொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 17-10-2004
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com

## 'தாயகத்தை' நிராகரிக்கும் சங்கரி!

ஆனந்தசங்கரி எப்பொழுது சிங்கள இனத்தின் பாதுகாவலரானார்? அவ்வாறானால், கடந்த காலத்தில் எவ்வாறு அவர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவரானார்? ஆனந்த சங்கரி போன்றவர்களை தமிழ் இனம் பெற்றெடுத்தது சாபமா? அன்றி அவலமா?

விடுதலைப்புலிகளுக்கும்–சிறிலங்கா அரசிற்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில், இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை தொடர்பான விடுதலைப்புலிகளின் ஆலோசனைகளின் அடிப்படையிலேயே ஆரம்பிப்பதற்கான சூழ்நிலை உண்டு.

ஏனெனில், இவ்யோசனைகள் பெரும்பாலும் பல தரப்பாலும் நிராகரிக்கப்பட முடியாததொன்றாகியுள்ளது. சிறிலங்காவின் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.கட்சி ஆட்சியில் இருந்தபோது இதனை ஏற்றுக் கொண்டு பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவும் தயாராகியிருந்தது.

தற்போதைய அரசாங்கத்திற்குத் தலைமை தாங்கும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூட இதனை முற்றாக நிராகரிக்கவில்லை. இடைக்கால தன்னாட்சி அதிகார சபை தொடர்பான பேச்சுவார்த்தை மேசையில் தம்மால் மாற்று யோசனை அடங்கிய திட்டம் ஒன்று முன்வைக்கப்படும் என்றே கூறி வருகின்றது.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான படி நிலையாகக் கொள்ளத்தக்கது என பேச்சுவார்த்தைக்கான ஏற்பாட்டாளராகச் செயற்படும் நோர்வேத் தரப்பும் கருதுகின்றது. சர்வதேச நிபுணர்கள் குழுவும் இவ் யோசனைகள் பேச்சுவார்த்தைக்கு ஏற்புடையவை எனவும் அபிப்பிராயம் கொண்டுள்ளது.

இவற்றிற்கும் மேலாக தமிழ் மக்கள் இதற்கான அங்கீகாரத்தைத் தேர்தல் மூலம் வழங்கியும் உள்ளனர். நிலைமை இத்தகையதாக இருக்கையில், விடுதலைப்புலிகள் அரசாங்கம் பரிசீலிக்கத்தக்க திட்டம் ஒன்றையும் முன்வைக்கவில்லை என ஆனந்தசங்கரி குறிப்பிட்டுள்ளமையே ஆனந்த சங்கரி குறித்து மேற்கூறப்பட்ட கேள்விகளை எழவைத்தது.

ஆனந்தசங்கரி தமிழ் இன விரோதியாகச் செயற்படுவது ஒன்றும் புதியதல்லத்தான். அவரின் கடந்த கால 'அரசியல் பணியில' இதற்கான பல சான்றுகள் உள்ளன. அதிலும் அண்மைக்கால அரசியல் வரலாற்றில் வன்னி மீதான சிறிலங்காவின் படையெடுப்பிற்கு அவர் வழங்கிய ஆலோசனையில் இருந்து, தற்பொழுது இடைக்கால தன்னாட்சி அதிகார சபை யோசனைகளை நிராகரித்தது வரையில் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்திற்கு எதிராக இவரின் செயற்பாடுகள் உள்ளன.

தமிழ் மக்கள் / விடுதலைப்புலிகள் தமது உரிமைக்கான கோரிக்கைகளை முன்வைக்கும்போது அதற்கு எதிரானதும், அவற்றை நிராகரிப்பதுமான கருத்துக்களை ஆனந்தசங்கரி முன்வைப்பதை அண்மையில் வழக்கமாக்கிக் கொண்டுள்ளார். எடுத்துக்காட்டாக, தமிழ் மக்கள் தமது சொந்த இடங்களில் குடியேற இராணுவம் பழைய இடங்களுக்குத் திரும்ப வேண்டும் எனப் புலிகள் கோரிக்கையை முன்வைத்தபோது, ஆனையிறவைவிட்டுப் புலிகளும் வெளியேற வேண்டியிருக்கும் எனத் தெரிவித்தவர் ஆனந்தசங்கரியாகும்.

அதாவது, சிறிலங்கா இராணுவத்தரப்போ அன்றி அரசாங்கமோ அன்றி பௌத்த–சிங்கள அடிப்படைவாதிகளோ இத்தகையதொரு கோரிக்கையை சிந்தித்தும் பார்க்காத வேளையிலேயே ஆனந்த சங்கரி இத்தகைய ஆலோசனையை வழங்கியவர்.

இடைக்கால தன்னாட்சி அதிகார சபை மூலம் பெரும்பான்மை பிரதிநிதித்துவத்தைப் புலிகள் கோருவதை ஏற்க முடியாது எனக் கூறும் ஆனந்தசங்கரி, கிழக்கு மாகாணத்தில் சிங்களவரும், முஸ்லிம்களும் வாழ்கின்ற நிலையில், விடுதலைப்புலிகளின் கோரிக்கைகளை எந்தவிதத்திலும் ஏற்க முடியாது எனத் தெரிவித்துள்ளமையானது ஆனந்தசங்கரியின் காட்டிக் கொடுப்பின் உச்சமாகவே கொள்ளத்தக்கது.

தனது பாராளுமன்ற ஆசனத்தைத் தமிழ் மக்கள் பறித்துவிட்டார்கள் என்பதற்காகத் தமிழர் தாயகம் என்பதையே கேள்விக்குள்ளாக்கும் அளவிற்கு ஆனந்தசங்கரி சென்றுள்ளதை வெளிப்படுத்துவதாகவே அவரின் கூற்று உள்ளது. தமிழர் தாயகத்தில் சிங்களவர்களும் வாழலாம்; முஸ்லிம்களும் வாழலாம்; அன்றி வேறு யாரும் வாழலாம்; அதற்காகத் தமிழர் தாயகத்தில் தன்னாட்சி அதிகாரத்தைப் புலிகள் கோருவதை ஏற்க முடியாது என ஆனந்தசங்கரி கூறுவது தமிழர் தாயகம் என்பதையே ஆனந்த சங்கரி மறுப்பதற்கு ஒப்பானதாகும்.

அதாவது, ஆனந்தசங்கரியின் பதவி ஆசை, சுயநலம் என்பன தமிழர் தாயகம் என்பதை நிராகரிக்கும் அளவிற்கு அன்றிக் காட்டிக் கொடுக்கும் அளவிற்கு அவரை கொண்டு சென்றுள்ளது. ஆகையினால், ஜாதிக ஹெல உறுமய போன்ற பௌத்த – சிங்கள இனவாதக் கட்சி தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினர் பதவி அவருக்கு வழங்க முன்வந்தமை ஆனந்தசங்கரியை அவர்கள் நன்கு புரிந்து கொண்டதன் விளைவே ஆகும்.

# பொலிசாருக்கு பதவி உயர்வு வழங்குவதற்கு உயர் நீதிமன்றம் கால அவகாசம் வழங்கல்

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பதவியுயர்வுகளின் போதான அநீதிகளைக் களைய உயர்நீதி மன்றம் பொலிஸ் ஆணைக் குழுவுக்கு மேலும் கால அவகா சத்தை வழங்கியுள்ளது.

பொலிஸ் திணைக்களத்தைச் சேர்ந்த சிலர் இது தொடர்பில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளனர். இது தொடர்பான வழக்கு விசா ரணை நேற்று முன்தினம் எடுத்துக் கொள் ளப்பட்ட போது பிரதி வாதி தரப்பான பொலிஸ் ஆணைக் குழுவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி மனுதா ரர்கள் பலருக்கு பொலிஸ் ஆணைக குழு பதவியுயர்வுகளை வழங்க நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாகத் தெரிவித் தனர். இதனைக் கருத்திற் கொண்டு உயர் நீதிமன்றம் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு இந்தப் பிரச் சினையை தீர்க்கும் வகையில் எதிர்வரும் நவம்பர் மாதம் வரையில் கால அவகாசத்தை வழங்கியது. (32)

# மு.கா-நு ஆவை இணைக்கும் நோக்குடன் நிந்தவூரில் சமரச விழாவுக்கு ஏற்பாடு

சிறிலங்கா முஸ்லிம் காங்கிர சையும் தேசிய ஐக்கிய முன்ன ணியையும் (நு ஆ) இணைக்கும் முதற்கட்ட நடவடிக்கையாக எதிர் வரும் சனிக்கிழமை நிந்தவூரில் சமர விழா ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

நிந்தவூரில் உருவாக்கப் பட்டுள்ள ஸகாத் நகர அபிவிருத் தித் திட்டம் எதிர்வரும் சனிக் கிழமை அமைச்சர் பேரியல் அஷ்ரப்பினால் ஆரம்பித்து வைக் கப்படவிருக்கின்றது. மறைந்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஸ்தாபகர் எம்.எச்.எம்.அஷ்ரப்பின் பிறந்த தினமாகிய அன்றைய தினம் இரு கட்சிகளையும் மீண் டும் இணைக்கும் சமரச நாளாக ஏற்பாட்டாளர்கள் ஏற்பாடு செய் துள்ளார்கள்.

தேசிய ஐக்கிய முன்னணித் தலைவியும் அமைச்சருமான பேரி யல் அஷ்ரப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் உட்பட அனைத்து பாராளுமன்ற உறுப் பினர்களும் அழைக்கப்பட்டுள் ளார்கள். இது தொடர்பாக தேசிய ஐக்கிய முன்னணியின் பிரதித் தலைவரும் பிரதி அமைச்ச ருமான சேரு இசதீன் கருத்து தெரிவிக்கையில்;

வட-கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண விடுதலைப் புலி களுடன் பேச வேண்டும் எனும் தமது கட்சியின் நிலைப்பாட்டை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தற்போது ஏற்றிருப்பது ஒரு திருப்பு முனை எனத் தெரிவித் தார்.

# திருமலை எரிபொருள் சேகரிப்பு நிலையத்தை 50கோடி செலவில் புதுப்பிக்க நடவடிக்கை

திருகோணமலையிலுள்ள எரிபொருள் சேகரிப்பு நிலையம் 50 கோடி ரூபா செலவில் புதுப் பிக்கப்படவுள்ளதாக டங்கா-ஐ நிறுவனத்தின் மேல் இயக்குனர் நாகேஸ்வரன் நேற்று கூறியுள்ளார்.

இங்கிருந்து எடுத்துச் செல்லும் மாதாந்த எரிபொருள் அளவு 22000.000 லீற்றராக இருக்குமென்றும் அவர் கூறியுள்ளார். இதனை இந்திய எரிபொருள் நிறுவ னத்தின் துணை நிறுவனமான டங்கா-ஐ அடுத்த மாதம் முதல் செயற்படுத்தும் என்றும் அவா சென்னையில் கூறியுள்ளார்.

# ஆயுதங்களை வைத்திருந்த ஆசிரியர் ஒருவர் கைது

(கொழும்பு)

ஆயுதம் வைத்திருந்தமைக் காகப் பாடசாலை ஆசிரியர் ஒருவர் பொலிசாரால் கைது செய் யப்பட்டுள்ளார்.

வென்னப்புவ பொலிஸ் பிரிவில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது

வெளிநாட்டுத் தயாரிப்பு ஆயுதங்கள் சிலவற்றை தன்வசம் வைத்திருந்ததற்காகக் கைதுசெய்யப்பட்டுள்ள குறித்த ஆசிரியர் அண்மையில் இத்தாலி யிருந்து திரும்பிய ஒருவரிட மிருந்தே இந்த ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததாகவும் கூறப்படுகின்றது.

ஆயுதங்கள் விற்றவரும், வாங்கியவரும் தற்போது விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளதாக வென்னப்புவ பொலிசார் தெரிவித் துள்ளனர்.

# பத்தாயிரம் பட்டதாரிகளுக்கு இன்னமும் நியமனம் இல்லை

10, 000 பட்டதாரிகளுக்கு இன்னும் நியமனங்கள் வழங் கப்பட வில்லை என தமக்கு முறைப் பாடு கிடைத்துள்ளதாக பிரதிநிதி அமைச்சர் அறிவித் துள்ளார்.

இதில் 9000 முறைப்பாட்டுக் கடிதங்கள் பரிசீலனை செய்யப் பட்டுள்ளதாகவும் ஏனைய ஆயிரம் முறைப்பாடுகளை ஆராய்ந்து வருவதாகவும் பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் சியம்பலப் பிட்டிய மேலும். தெரிவித்துள்ளார்.

### -அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து-

# அமைப்பாளர்களுக்கு விளக்க சனாதிபதி சந்திரிகா முடிவு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை ஒவ்வொரு மாதந்தோறும் வரவழைத்து அரசாங்கம் மேற்கொள்ள இருக்கும் அபிவிருத்தித் திட்டங்கள் சம்பந்தமாக அறிவுரை வழங்குவதற்கு சனாதிபதி சந்திரிகா புதியதிட்டங்களை வகுத்துள்ளார். சகல மாவட்ட அமைப்பாளர்களுக்கும் இது சம்பந்தமாக அறிவித்தல்கள் வழங்கப் பட்டுள்ளன.

# துப்பாக்கிகளுடன் மூவர் கைது

(கொழும்பு)

சட்ட விரோத ஆயுதங்களுடன் மூன்று நபர்களை சிறிலங்காவின் தங்கால பொலிசார் கைது செய் துள்ளனர்.

ஒரு 303 ரக துப்பாக்கி ஒரு கைக்குண்டு, ஒரு இரட்டைக்குழல் துப்பாக்கி மற்றும் பேனா அளவு பிஸ்ரல், வெடி மருந்துகள் என்பன வற்றுடன் ஐம்பது உரிதிப் பாகங்கள் என்பன இந்நபர் களிடமிருந்து மீட்கப்பட்டுள்ள தாகவும்.இந்த ஆயுதங்கள் ஒவ்வொன்றும் தலா ஐயாயிரம் ரூபாவிற்கு பாதாள உலகக் குழுவிற்கு விற்கப்பட இருந்த தாகவும் தெரிவிக்கும் தங்கால பொலிசார் குறித்த நபர்கள் நீதிமன்றில் முற்படுத் தபட்ட பின் விளக்க மறியலில் வைக்கப் பட்டுள்ளதாகவும் கூறியுள்ளனர்.

# ஜாதிக ஹெல உறுமய உயர்சங்கத்தின் கூட்டத்தில் கலந்து கொள்வதில்லை

### -தம்மாலோக தேரர் தெரிவிப்பு

ஜாதிக ஹெல உறுமய கட்சி யின் அதியுயர் சங்கப் பீடத்தின் பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்ளப்போவதில்லையென உடுவே தம்மாலோக தேரர் தெரி வித்துள்ளார்.

இது பற்றித் தெரியப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட சந்திப்பு இன்று நடைபெற வுள்ளது. ஜாதிகஹெல உறுமய கட்சியின் ஆலோசனைச் சபை உறுப் பினர்கள் சிலரின் கோரிக்கைக்கு அமைய இச் சந்திப்பு நடைபெற வுள்ளதாக அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

## சிப்பாய்கள் கைது

அனுமதியின்றி இரும்புப் பாளங்கள் (கேடர்) மற்றும் நட்டுக் களைத் திருடிய இரண்டு இராணு வச்சிப்பாய்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். மகாவலி பாதுகாப்பு நிறுவன அதிகாரிகளால் குறித்த இரண்டு இராணுவச் சிப்பாய்களும கைது செய்யப்பட்டதுடன் இதற் கெனப்பயன்படுத்தப்பட்ட பார ஊர்தியொன்றும் கைப்பற்றப்பட்டது.

# ரி.ஆர். ரெக் நிறுவனத்தின் அனுசரணையுடன்

# திருமலையில் இரு கணினிப்பயிற்சி நிலையங்கள்

லண்டனில் புலம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கான தொழில்நுட்பப்பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புக்காகப் பணியாற்றிவரும் தன்னார்வ தொண்டுநிறுவனமான ரி.ஆர்.ரெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் மேலும் இரண்டு கணினிப் பயிற்சி நிலையங்கள் கடந்த புதன்கிழமை மூதூர் கிழக்கு-சம்பூர் மகாவித்தியாலயத்திலும், சேனையூர் மத்தியகல்லூரியிலும் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ளன . ரி.ஆர்.ரெக் அனுசரணையுடன் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் 50 பாடசாலைகளில் 500 மாணவர்களுக்கு இலவச கணினி அறிவைப்புகட்டும் திட்டத்தின் கீழ் திருகோணமாலை மாவட்டத்தில் நிலாவெளி மகாவித்தியாலயம், தம்பலகமம் ஆதிகோணநாயகர் மகாவித்தியாலயம், கிளிவெட்டி மகாவித்தியாலயம், கட்டைபறிச்சான் பாடசாலை ஆகியவற்றில்கணினிப் பயிற்சிகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன.

கடந்த புதன்கிழமை5ஆவது கணினிப் பயிற்சி நிலையத் திறப்பு நிகழ்வு சேனையூர் மத்தியகல்லூரியில் நடைபெற்றது.

பொது ஈகச்சுடரினை திருமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் ஏற்றிவைத்தார். தமிழீழ தேசியக்கொடியினை விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் ஏற்றிவைத்தார். கணினிப் பயிற்சி நிலையத்தை நிர்வாக சபைப் பொறுப்பாளர் திறந்துவைத்தார். மாவட்ட கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் கணினிப் பயிற்சியை ஆரம்பித்துவைத்தார். பாடசாலை அதிபர் இரா.இரத்தினசிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். நிகழ்வுக்கு பொருண்மிய மதியுரையகத்தின் மாவட்ட இணைப்பாளர் ந.கலைசங்கர் தலைமைவகித்தார். விடுதலைப்புலிகள் முக்கியஸ்தர்களான வி.தங்கன், புரட்சி ஆகியோரும் பங்குபற்றினர்.

பின்னர் சம்பூர் மகாவித்தியாலயத்தில் கணினிப் பயிற்சி நிலையத்தை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் திறந்துவைத்தார். கணினிப் பயிற்சியை திருமலை மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி ஆரம்பித்துவைத்தார். பொது ஈகச்சுடரினை பாடசாலை அதிபர் வ.செல்வநாயகம் ஏற்றினார். தமிழீழ தேசியக்கொடியை மாவட்டக் கல்விக்கழகப் பொறுப்பாளர் கவியன்பன் ஏற்றினார். ஐ.ரி.ரெக் நிறுவன இணைப்பாளர் கலைசங்கர் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

புதிதாகத் திறக்கப்பட்ட இரு கணினிப் பயிற்சி நிலையங்களிலும் சுமார் 200 மாணவர்கள் கணினிப் பயிற்சி பெறுவதற்கு அனுமதிக்கப்பட்டனர். (25)

# கனடா சிலம்பம் அமைப்பினர் உருவாக்கிய "பொங்கு தமிழே" இசைத்தட்டு வெளியீடு

கனடா சிலம்பம் அமைப்பினர் உருவாக்கிய அரிமா அழகனின் "பொங்கு தமிழே" பாடல் இசைத்தட்டு வெளியீடு விழா நாவலர் கலாசார மண்ட பத்தில் நேற்று மாலை 4.30 மணி யளவில் யாழ். மாவட்ட மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் எழிலன்பன் தலைமையில் இடம் பெற்றது. இந்நிகழ்வின் முதல் நிகழ்வாகப் பொதுச்சுடரினை லெப். கேணல் தூயவனின் தாயார், தந்தையார், சகோதரி ஆகியோர் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து தமிழ்வாழ்த்துப் பாடசாலை சங்கீத பூசணம் சி.கணபதிப்பிள்ளை அவர்கள் பாடினார். அதனைத் தொடர்ந்து வரவேற்புரையை கலாபூசணம் ந.சிவசண்முகமூர்த்தி நிகழ்த்தினார். தொடர்ந்து சிறப்புரையை போரசிரியர் சண்முகதாஸ் நிகழ்த்தினார். வெளியீட்டுரையை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார். இசைத்தட்டின் முதற் பிரதியை நடராசா வெளியிட்டு வைக்க, இந்திரா தவநாயகம் பெற்றுக் கொண்டார். சிறப்புப் பிரதியை மிருதங்க வித்துவான் சிதம்பரநாதன் வெளியிட்டு வைத்தார். அதனைத் தொடர்ந்து மதிப்பீட்டுரையை பேராசிரியர் சண்முகலிங்கம் நிகழ்த்தினார். இந்நிகழ்வில் பெருமதிரளானோர் கலந்து கொண்டனர்.

(36, 33,27)

## திறப்புவிழா

கப்டன் அபயன் ஞாபகார்த்த மாலை நேரக் கல்வி மண்டபத் திறப்பு விழா இன்று பன்னங் கண்டிப் பகுதியில் நடைபெற உள்ளது. இன்று காலை10.00 மணிக்கு கிளிநொச்சி பன்னங் கண்டிப்பகுதியில் இம்மண்டபம் திறந்துவைக்கப்பட இருக்கிறது.

## முள்ளியவளைப்பிரதேசத்தில் விவசாய உபகரணங்கள் வழங்கல்

(முள்ளியவளை)

கெயர் நிறுவன நிதியுதவியுடன் முள்ளியவளைப்பிரதேச பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. முள்ளியவளை கிழக்குக் கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட மக்களின் அவசர, உடனடித் தேவைகளின் அடிப்படையில் அப்பகுதியில் பொதுக்கிணறுகள் அமைக்கப்பட்டு வருவதுடன் பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு மலசலகூடம் அமைக்கப்படுவதுடன், அப்பகுதி விவசாயிகளின் தேவையைக்கருத்தில் கொண்டு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ந்து விவசாய உள்ளீடுகள், விதை தானியங்கள் என்பன வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது (ஆ)

## கராத்தே வீரர்கள் சமூகம் தரக்கோரல்

07.10.2004 நடைபெற்ற கிளி. மாவட்ட கராத்தேப் போட்டியில் பங்குபற்றி 1ஆம், 2ஆம் இடங்களைப் பெற்றுக்கொண்ட அனைத்து வீரர்களையும் இன்று மாலை 3.00 மணிக்கு கிளி/மத்திய விளையாட்டு மைதானத்தில் ஒன்று கூடுமாறு கேட்டுக்கொள்ளப்படுவதுடன், இந்நிகழ்வில் கலந்துகொள்ளாத வீரர்கள் எதிர்வரும் 23.10.2004 நடைபெறும் மேஜர் ஈழப்பிரியா தேசிய கராத்தே சுற்றுப்போட்டியில் பங்குகொள்ள முடியாது எனவும் கிளி.மாவட்ட கராத்தேச் சங்கம் கூறியுள்ளது.

## இணைந்து...

ஆரம்பமாக இன்றைய நிகழ்வு அமைகிறது'' என்று எழிலன் தெரிவித்தார்.

"விடுதலைப்புலிகளின் ஒரு பக்கத்தை மட்டும் பார்க்காதீர்கள் எம் மறுபக்கத்தையும் பாருங்கள். மற்றப்பக்கத்தைப் பார்க்கத் தவறுவதால் சந்தேகம் எழுகின்றது. வரலாறு தருகின்ற பாடத்தை நாம் பார்க்கவேண்டும். ராமாயணப், பாரதப் போர்கள் எல்லாம் கூறும் பாடம் என்ன? போருக்கு அப்பாலே உள்ள தர்மத்தை அப்போர்கள் கூறுகின்றன. ஆயுதம் தூக்கிய விடுதலைப்புலிகளைப் பார்க்காமல் அதற்கப்பால் உள்ள தன்மையையும், கொள்கைகளையும் பார்க்க வேண்டும்'' என்றும் எழிலன் முஸ்லிம் பெரியார் களைக் கேட்டுக்கொண்டார். (25)

## இலங்கை...

இருந்தது.இவை எதிர்வரும் 21ஆம் திகதியிலிருந்து [illegible] குறைவடையும் அதே போன்று இலங்கையிலிருந்து பேசு வோரின் கட்டணமும் குறைவடையும்.

இதேவேளை திருச்செந்தூர்- கொழும்பு இடையே கடலடிக் கேபிள்கள் நிறுவப்படுகின்றன .இப் பணி ஓராண்டில் முடிவடையவுளள்தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ஊடகங்கள்...

. நடக்கவிருப்பதாக வெளியான தகவல்கள் பற்றி துணைவேந்தரிடம் கேட்கப்பட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அதேவேளை குறித்த பதவி நியமனம் தொடர்பாக ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்திற்கென பல்கலைக்கழகம் அமைத்துள்ள ஆலோசனைச் சபை, பகிரங்க நேர்முகப்பரீட்சை மூலமே பொருத்த மானவர் தெரிவுசெய்யப்படவேண்டுமென பிரேரித்திருப்பது அந்த ஆலோசனைச் சபைக்குரிய பொறுப்பல்ல என ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் தற்போதைய பயிற்சி இணைப்பாளராகச் செயற்படும் சே.அருட்செல்வன் தெரிவித்திருப்பது அவருடைய சொந்தக் கருத்தென்றும், ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையத்தின் ஆலோசனைச் சபைக்கான தலைவர் என்ற ரீதியில் ஆலோசனைச் சபையின் வழிகாட்டலைத் தான் மட்டுமே நெறிப்படுத்த முடியும் எனறும், பத்திரிகை ஆசிரியர்கள் அங்கம் வகிக்கின்ற ஆலோசனைச்சபை ஊடகவளங்கள் பயிற்சி நிலையத்தின் முதுகெலும்பென்றும் துணைவேந்தர் உறுதிபடக் கூறினார். (27)

## தமிழ்த்...

ஆகியோரையும் சேர்த்து 17 எம்.பிகள் இம் மூன்று நாள் பிரச்சாரத்தில் ஈடுபடுகின்றனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்கும் விடுதிக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. (25)

## "அலைபாடும் பரணி" இன்று வடமராட்சியில் வெளியீடு

விடுதலைப்புலிகளின் கடற்புலிகளின் ஆதரவில்,இசைப் பிரியனின் இசையில், தர்மேந்திரா கலையகத்தால் உருவாக்கப்பட்ட"அலை பாடும் பரணி"ஒலி நாடா இன்று வடமராட்சியில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. நெல்லியடி முருகன் ஆலய கல்யாண மண்டபத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இவ் ஒலிப்பதிவு நாடா வெளியிட்டு வைக்கப்படவுள்ளது (27)

# சிறு நீரக மாற்றுச் சிகிச்சைக்கு உதவி செய்யக் கோரிக்கை

முல்லை மாவட்டத்தில் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் வள்ளிபுனத்தில் வசித்து வரும் ஆ.கஜேந்திரன் சிறுநீரக நோயினால் மோசமாகப் பாதிப்படைந்துள்ளார். இவர் கடந்த 17 நாட்கள் யாழ்போதனாவைத்தியசாலையில் சிகிச்சைகாக அனுமதிக்கப்பட்டிருந்து தற்போது மேலதிக சிகிச்சைகாக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்கான உடல் நிலை இருக்கும் இவருக்கு வயது 25. வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இவர்களது குடும்பத்தினால் சிறுநீரக மாற்றுச் சிகிச்சைக்குரிய பணத்தைத் தேடிக்கொள்வது இயலாத காரியமாகும்.

எனவே,இரக்கசிந்தனையும், மனிதாபிமானமும் உடையவர்கள் மக்கள் வங்கியின் ஸ்ரான்லி வீதிக் கிளையில் (கிளை இல.030) எனத் தொடக்கப்பட்ட 207-038565-2 இலக்கக் கணக்குக்கு தமது நன்கொடைகளை வழங்குமாறு திருமதி பிருந்தா-கஜேந்திரன் கேட்டுக்கொள்கின்றார். (20)



கிளிநொச்சி 155ஆம் கட்டைப்பகுதியில் நேற்று எ-9 பிரதான வீதியின் ஓரமாக வீதியில் இருந்து ஒரு மீற்றர் தூரத்தில் மது அருந்திய ஒருவர் ஈருளியுடன் வீழ்ந்து கிடப்பதைப் படத்தில் காண்கிறீர்கள். வீதிவிபத்துக்கள் அதிகரித்து வருகின்ற இன்றைய நிலையில் இத்தகைய சம்பவங்கள் விபத்துக்கள் நடைபெறுவதற்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கது. (படம்.அ.லோகீசன்)

# கட்டாக்காலி நாய்களால் முள்ளியவளையில் தொல்லை

முள்ளியவளைப் பிரதேசத்தில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ளது.

மேற்படி கட்டாக்காலி நாய்கள் பகல் வேளைகளில் பிரதான வீதிகளிலும், பொதுச் சந்தைகளிலும் மற்றும் பொது இடங்களிலும் பெருமளவில் திரிவதால் மக்கள் அவலப்பட்டு வருவதை அவதனிக்க முடிகிறது. குறிப்பாக முள்ளியவளை, தண்ணீருற்று பொது சந்தைகளுக்குள் குட்டை, சொறி, புண்பட்ட நிலை எனப் பல்வேறு விதமாக குட்டி நாய்கள் உட்பட பெருமளவான நாய்கள் உள்ளதால் சந்தைக்குச் செல்லும் மக்கள் அவலப்படுவதுடன் வியாபாரிகளும் அவலப்பட்டு வருகின்றனர்.

மேற்படி கட்டாக்காலி நாய்கள் பிரதான வீதிகளையும் பொது இடங்களையும் அசுத்தப்படுத்தி வருவதால் வீதியூடாக பயணிப்போர் சிரமத்துக்குள்ளாகி அவலப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## சமரசமாக முடிக்கக்கோரல்

ஆதிவாசி ஒருவர் சிங்கள மொழியில் பேசவில்லை என்பதால் அவரை பொலிஸ் அதிகாரி ஒருவர் இம்சித்ததாகக் கூறப்பட்டு உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை சமரசமாக முடிக்குமாறு உயர்நீதிமன்றம் சட்டமா அதிபரிடம் கேட்டுள்ளது. மஹியங்கனையில் வசிக்கும் ஆதிவாசியான ஊரவலகே கெக்குலா என்பவரே இந்த அடிப்படை உரிமை மீறல் வழக்கை மஹியங்கனை பொலிஸ் பொறுப்பதிகாரியின் மீது தொடந்திருந்தார். (32)

## சிங்கள...

டுவரப்பட்டனர். பின்னர் அங்கிருந்து திருமலை கடற்படைத்தளத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர். இதேவேளை விடுவிக்கப்பட்ட இரண்டு ஊர்காவற் படையினரையும் திருகோணமலை கடற்படைத்தளத்திற்கு வந்திருந்த சனாதிபதியின் செயலாளர் கருணாரட்ண, உள்நாட்டுப் பாதுகாப்பமைச்சின் செயலாளர் திலக்ரணவிராஜ மற்றும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன ஆகியோர் வரவேற்றனர். பின்னர் கடற்படைத்தள இல்லத்திலிருந்து சனாதிபதியுடன் இரண்டு ஊர்காவற்படையினரும் தொலைபேசியில் உரையாடினர். பின்னர் அவர்களின் உறவினர்கள் உண்ணாவிரதம் இருந்த திருமலை மணிக்கூட்டுக்கோபுரச் சந்திக்கு கண்காணிப்புக்குழுவினர் ஊர்காவற்படையினரை அழைத்துச்சென்று விடுவித்தனர்.

பத்து விடுதலைப் புலிகளையும் விடுவிப்பதற்கு போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழு தீவிரமுயற்சி எடுத்து அதற்கான நல்லெண்ண நடவடிக்கையாகவே தாம் ஊர்காவற்படையினரை விடுவித்தோம் என எழிலன் தெரிவித்தார். (25)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.